விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (12.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## 13ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பில்

# கூட்டமைப்புடன் பேச அரசு தயார்-மகிந்த



(கொழும்பு)

*அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

இந்தியாவின் "தி இந்து" ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இச்செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தமை தொடர்பில் நான் சீற்றமடைந்ததாக வெளியான செய்திகளை நிராகரிக்கிறேன்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## முல்லைத்தீவில் முளைக்கும் புத்தர்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாயில் சிறி சம்போதி மகா விகாரை அமைக்கும் பணி முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும்

19 ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் நியதிச் சட்டம் முரணானது ஆளுநரின் அதிகார எல்லைகளை ஊடகங்களிடம் சந்திரசிறி விளக்கம்

(கொழும்பு)

வட மாகாண முதலமைச்சர் நியதிச் சட்டம் இலங்கையின் அரசியலமைப்பிற்கும் மாகாண சபைகள் சட்டத்திற்கும் முரணானதாக உருவாக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டியிருக்கும் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, கூட்டமைப்பு மாகாணசபை சட்டத்திற்குட்பட்டு செயற்படுமாயின் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் ஆளுநர் செயலகத்தில் யாழ்.ஊடகவியலாளர்களை சந்தித்த ஆளுநர், தமக்கும், மாகாணசபைக்கும் என்னவாறான அதிகாரங்கள் இருக்கின்றன என்பது குறித்து விளக்கமளித்தார்.

இதன்போது ஆளுநர் மேலும் கூறுகையில்,

வட மாகாணசபை 3 நியதிச் சட்டங்களை எமக்கு அனுப்பியிருக்கின்றது. அதில் முதலமைச்சர் நிதியம் நியதிச்சட்டம் மற்றைய மாகாணங்கள் எவற்றிலும் இல்லாததுடன், அரசியலமைப்பினையும் மாகாண சபைகள் சட்டத்தினையும் மீறுவ

19 ஆம் பக்கம் பார்க்க....

## 70 அடி நீளப் படகுடன் இந்திய மீனவர் கைது

### 55 பேரும் 7 படகுகளும் தடுப்பில்



19 ஆம் பக்கம் பார்க்க....



## எங்கள் இயக்கம் இது போன்ற காரியங்களைச் செய்வதில்லை

11 ஆம் பக்கம் பார்க்க....

## அரசுக்கு பாதக நிலை

### அமைச்சர் திஸ்ஸ கருத்து

(கொழும்பு)

சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகளை அமுல்படுத்தாமையினால் அரசாங்கத்திற்கு பாதக நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகளை அரசாங்கம் உரிய

20 ஆம் பக்கம் பார்க்க....

## உங்களின் படங்களை நாங்களும் எடுப்போம்

### இராணுவத்திற்கு முதலமைச்சர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது பாதுகாப்புக்கா அல்லது மக்களை அச்சுறுத்துவதற்கா படம் எடுக்கின்றீர்கள்? பாதுகாப்பென்றால் எங்கள் மக்களுக்குத் தேவையான ஒரேயொரு பாதுகாப்பு இராணுவத்தினரிடம் இருந்துதான்.

நாங்கள் இராணுவத்தினரை எங்களைப் பாதுகாருங்கள் என்று கூறவில்லை. இராணுவம் இங்கு இருப்பதால் எம் மக்கள் தான் பாதுகாப்பின்றி பயத்திற்கு ஆளாகின்றார்கள். படம் எடுப்போர் அவ்வாறு செய்வதை உடனே நிறுத்த வேண்டும். இல்லை என்றால் எங்கள் இளைஞர் யுவதிகளைக் கொண்டு உங்களின் படங்களை நாம் எடுத்து தெற்கிலே பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோம் என்று இராணுவத்தினருக்கு நேரடியாக எச்சரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

முழங்காவில் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணி

19 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வை இராணுவம் கண்காணிக்கவில்லை

### விக்கியின் குற்றச்சாட்டிற்கு ருவான் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கை, சூழல் உட்பட சகலவற்றையும் கண்காணித்து வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு பொய்யானது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்களின் அன்றாட வாழ்க்கையை இலங்கை இராணுவம், இஸ்ரேல் தொழிற்நுட்ப புலனாய்வு சேவையின் மூலம் கண்காணித்து வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியிருந்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## வட-கிழக்கில் 25 வருடங்களுக்கு இராணுவம் நிலை கொண்டிருக்கும்

### உலகை ஏமாற்றி ஆட்சியாளர்கள் அராஜகம்-விக்கி

(யாழ்ப்பாணம்)

இராணுவம் வடகிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து 25 வருடங்களுக்கேனும் இருக்கவேண்டும் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தொட்டிலையும் ஆட்டிவிட்டு குழந்தையையும் கிள்ளி [illegible] பட்டு வருகின்றது. ஒரு புறம் எம்முள் இணக்கம் வேண்டும், நாம் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று ஊரறிய, உலகறிய, வாய் வழியாகக் கத்துகின்றார்கள் அரசாங்கத்தவர்கள். மறுபுறம் இராணுவக் கட்டுப்பாட்டைக் கூட்டி மக்களை அச்சுறுத்தி



19 ஆம் பக்கம் பார்க்க....

## குடும்பப் பதிவுகளை மீண்டும் இராணுவத்தினர் யாழில் ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினர் மீண்டும் குடும்ப பதிவுகளை நேற்று தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.

இராணுவச் சீருடையுடன் சென்று இந்த குடும்ப பதிவுகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஏழாலை தெற்கு, தென்மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள பகுதி வீடுகளுக்குச் சென்றே இந்த பதிவு நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்தப்பதிவு நடவடிக்கையின் போது முக்கியமாக இராணுவத்தினரால் வெளிநாடுகளில் உள்ளவரகள் தொடர்பான விபரங்கள் அதிக

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கமே பகிடிவதை செய்கிறது

## அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் விசனம்

(கொழும்பு)

உண்மையில் அரசாங்கமே பல்கலைக் கழக மாணவர்களுக்கு பகிடிவதையை கொடுப்பதாகவும் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கும் முன்னரே அதனை செய்வதாகவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் நஜித் இந்திக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வழங்கும் பகிடிவதைகளால் மாணவர்கள் உயிரிழந்தும் அங்கவீனமடைந்தும் உள்ளனர்.

தலைமைத்துவ பயிற்சி என்ற பெயரில் 2011 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

உலகில் எந்த வளர்ச்சியடைந்த நாடும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்கி அவர்களை இராணுவ முகாம்களில் அடைப்பதில்லை.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சிகளை வழங்க முடியும் என்ற நம்பிக்கை உலகில் எந்த நாட்டிலும் இல்லை. எனினும் இலங்கையில் இது நடைமுறையில் உள்ளது.

மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை ஆரம்பித்து 4 வருடங்கள் கடந்து விட்டது. பலர் இதனை நியாயப்படுத்துகின்றனர்.

இலங்கையில் ஜனநாயகத்தை பற்றி பேசும் அரசியல் கட்சிகள், அமைப்புகள், நபர்கள் கூட பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சிகள் குறித்து பேசுவதை நிறுத்தி விட்டனர்.

அரசாங்கம் தனது அரசியல் சவால்களில் வெல்வதற்காக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்குகிறது.

கல்வியை வர்த்தக பண்டமாக மாற்றும் வேலைத்திட்டமே அரசாங்கத்திற்கு இருக்கும சவால்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர், கல்வியமைச்சர்களாக நியமிக்கப்பட்ட பந்துல குணவர்தன, எஸ்.பி. திஸாநாயக்க போன்றவர்கள் கல்வியை வர்த்தக பொருளாக்கும் வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பித்தனர்.

இந்த அமைச்சர்கள் இதற்கான வேலைத திட்டங்களில் நேரடியாக ஈடுபட்டதுடன் அதற்கான கொள்கைகளை வகுக்க ஆரம்பித்தனர்.

இதனை எதிர்க்கும் சக்திகளுக்கு எதிராக உத்தியோகபூர்வ அறிக்கைகளை வெளியிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் நஜித் இந்திக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## பௌர்ணமி விழா

(கரவெட்டி)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய பௌர்ணமிவிழா இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் தலைவர் சி.வி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக நெல்லியடி கட்டைவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர் தம்பிராஜா பஞ்சலிங்கமும், சிறப்பு விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இசையமைப்பாளரும், கொழும்பு விக்னா இசைக்குழுவின் இயக்குநருமான பா.நகேந்திரன் (இசைக்கிளி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

# பங்களாதேஷ் பாதுகாப்புக்குழு கோத்தபாயவுடன் சந்திப்பு



(கொழும்பு)

பங்களாதேஷ் தேசிய பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த குழுவினர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்தனர்.

பங்களாதேஷ் தேசிய பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த 32 பேர் கொண்ட குழுவினர் கடந்த செப்டம்பர் 07 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்து ஒரு வார கால கல்விச் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்தனர்.

இச்சந்திப்பின்போது இருதரப்பு பரஸ்பர உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுசசின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (செ-11)

# திருமலை கடற்படை முகாமில் கடத்தப்பட்ட நெடுந்தீவுக் குதிரைகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாகப் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்ட 4 குதிரைகளும் கடற்படையினரால் திருகோணமலைக் கடற்படைமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

நெடுந்தீவில் இருந்து படையினரால் குதிரைகள் கடத்தப்படுவதாக அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், யாழ்மாவட்ட இராணுவத்தளபதி உதய பெரேரா தரைப்படையினர் இத்தகைய நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லையென ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இதன் பின்னணிபற்றித் தெரிந்து கொள்வதற்காக அமைச்சர் ஐங்கரநேசன் மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்துடன் நெடுந்தீவுக்கு நேற்று வியாழக்கிழமை சென்றிருந்தார்.

நெடுந்தீவில் மேய்ச்சல் நிலங்களில் குதிரைகளைப் பார்வையிட்ட அமைச்சர் பிரதேச சபை அதிகாரிகள், கடற்படைமுகாமைச் சேர்ந்த லெப்டினனட் கொமாண்டர் கருணாரட்ன மற்றும் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தபோதே கடத்தப்பட்டதாகக குறிப்பிடப்பட்ட 4 குதிரைகளும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியுடன் கடற்படையினரால் திருகோணமலைக் கடற்படைமுகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். (செ-6)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136 + நாடுகளில் 1040 + கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், STANDARD PRONUNCIATION, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம். பிரான்ஸ் செல்வோர் பதிவு செய்யுங்கள்...
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → ஆலயம் ✝ → AF அல்லது ஆரியகுளத்திலிருந்து றக்கா றோட் → AF



**தசாக கிருஹயக்ஞ (வீட்டுக்கிருத்திய) அழைப்பு**



அமரர்
ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா
அவர்களின் தசாஹாதி ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

13.09.2014 சனிக்கிழமை – காலை 8.00 மணி – தசாகம்
14.09.2014 ஞாயிற்றுக்கிழமை – காலை 9.00 மணி – ஏகோதிஷ்டம் – மாசிகம்
15.09.2014 திங்கட்கிழமை காலை – 9.00 மணி – சபிண்டீகரணம்
16.09.2014 செவ்வாய்க்கிழமை – காலை 9.00 மணி – கிருஹயக்ஞம்

துன்னாலை வடக்கு, கரவெட்டி. (இ) இங்ஙனம், குடும்பத்தினர்.


## மனித உரிமைகளின் நிலை என்ன?

# இலங்கை அரசின் பதிலுக்காய் காத்திருக்கிறார் பான் கீ மூன்

(நியூயோர்க்)

இலங்கை அரசாங்கத்தின் பதிலுக்காக காத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட போதிலும், அதற்கான பதில் இதுவரையில் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக மனித உரிமை ஆர்வலர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பிலேயே இவ்வாறு தொடர்பாடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் பற்றி பேசப்பட்டு வருகின்றது.

இதில் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டார்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பில் பதிலளிக்குமாறு இலங்கையிடம் கோரப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஆங்கில செய்தி அறிக்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிராக செய்திகள் வெளியிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு பிழையான தகவல்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அரச ஊடகச் செய்திகளில் குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் தொடர்பில் பதிலளிக்குமாறு இலங்கையிடம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை என பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (செ-11)


**கார் விற்பனைக்கு**
அரச உத்தியோகத்தரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள கார் உடன் விற்பனைக்கு உண்டு. NISSAN - March, HK-11, HD-XXXX Auto, Alloys Wheel, Full Option, 1300CC, 4 Door, Central Locking, Low Mileage, Good Condition. Rs. 13/90, Jaffna Town.
(7764) 0718175811
(தரகர் தேவையில்லை)



**இவ்வார வெற்றியாளர்கள்**



1. த.திஷானி -யாழ்ப்பாணம்
2. அ.துஷாந்தன் -கிளிநொச்சி
3. செ.நந்தமோகன் -வவுனியா

| | | |
|---|---|---|
| கொழும்பு — டுபாய் | 20000/= | One way |
| கொழும்பு — சென்னை | 22000/= | Return |
| கொழும்பு — திருச்சி | 22400/= | Return |
| கொழும்பு — டோகா | 26000/= | One way |
| கொழும்பு — அபுதாபி | 26500/= | One way |
| கொழும்பு — மலேசியா | 32000/= | Return |
| கொழும்பு — சிங்கப்பூர் | 30800/= | Return |
| கொழும்பு — பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு — ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு — லண்டன் | 45400/= | One way |
| கொழும்பு — சுவிஸ் | 83500/= | Return |
| கொழும்பு — கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
(C-8485) யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128,பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
Mobile 0773083820 www.nationtravels.com
Hot line 0114651199 Jaffna 0214920920



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815, 021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அமைச்சின் பார்த்தீனியம் ஒழிப்பில் களைநாசினிப்பிரிவும் களம் இறங்கியுள்ளது



யாழ் மாவட்டத்தில் விவசாயத்தையும், மனித உடல் நலத்தையும், சுற்றுச்சூழலையும் மிக மோசமாகப் பாதித்து வரும் பார்த்தீனியத்தை ஒழிக்கும் பணியில் வடக்கு விவசாய அமைச்சு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. பார்த்தீனியம் ஒழிப்புப் படையணியொன்றை உருவாக்கி வேலைக்கு உணவு, ஒரு கிலோ பார்த்தீனியத்துக்கு 10 ரூபா போன்ற அணுகுமுறைகளைக் கடைப்பிடித்த வடக்கு விவசாய அமைச்சு அதன் அடுத்த கட்டமாக களைநாசினி விசிறும் பிரிவு ஒன்றையும் உருவாக்கியுள்ளது. இந்தப் பிரிவின் நடவடிக்கைகளை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊரெழுவில் ஆரம்பித்து வைத்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் தெரிவிக்கையில்,

செயற்கை உரங்கள், பீடைகொல்லிகள், களைகொல்லி இரசாயனங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்தில்கொண்டு விவசாயத்தில் இவற்றின் பயன்பாட்டை இயன்றளவு குறைக்குமாறே நாம் வலியுறுத்தி வருகிறோம். இதன் அடிப்படையிலேயே பார்த்தீனியம் ஒழிப்பிலும் முதற்கட்ட நடவடிக்கையாக களைகொல்லி இரசாயனங்களை விசிறுவதைத் தவிர்த்துக் கைகளினால் பிடுங்கி அழிக்கும் முறைகளையே நடைமுறைப்படுத்தி வந்துள்ளோம். நாம் முன்னெடுத்த வேலைக்கு உணவு, பார்த்தீனியத்துக்குக் காசு கொடுத்துக் கொள்வனவு செய்தல் போன்ற நடைமுறைகளின் மூலம் பார்த்தீனியம் ஒழிப்பில் கணிசமான அளவு வெற்றியும் கண்டிருக்கிறோம்.

அண்மையில் பெய்த சிறு மழையின் பின்னர் முளைக்கத் தொடங்கியிருக்கும் பார்த்தீனியத்தை அது முற்றாக வளர்ந்து எமது நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு முன்பாக விரைந்து ஒழிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு உள்ளது. அதன் காரணமாகவே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் களை நாசினிகளை விசிறி அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். ஆனாலும், தொடர்ச்சியாக களைகொல்லி இரசாயனங்களைப் பயன் படுத்துவது ஆரோக்கியமானதல்ல. பொது மக்கள் தங்கள் பகுதிகளில் முளைக்கத் தொடங்கியிருக்கும் பார்த்தீனியத்தை விவசாய அமைச்சு வந்து அழிக்கும் என்றோ, இன்னொருவர் வந்து அழிக்கவேண்டும் என்றோ காத்திராமல் தாங்களாகவே ஆரம்ப நிலையிலேயே கைகளினால் பிடுங்கி அகற்றுவதற்கு முன்வரவேண்டும்.

எவருடைய வீட்டு வளவிலேனும் விவசாய நிலத்திலேனும் பார்த்தீனியம் காணப்பட்டால் அவற்றை அழிப்பது காணி உரிமையாளர்களின் கடமை. அழிக்கத் தவறினால் இலங்கை அரசின் 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கத் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின்படி உரிமையாளர்களுக்கு ஆறு மாதங்கள் வரை சிறைவாசமும், ஒரு இலட்சம் ரூபா வரை தண்டப்பணமும் அறவிடலாம். பொதுநன்மை கருதி 2015 தை முதலாம் திகதியில் இருந்து இந்தச் சட்டத்தை வடமாகாணத்தில் அமுல்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியின்போது களைநாசினி விசிறும் பணியாளர்களுக்கு களைநாசினிகளைப் பாதுகாப்பாக எவ்வாறு விசிறுவது என்று விளக்கமளிக்கப்பட்டதோடு, அவர்களின் தற்காப்புக்கான உடைகள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதன்போது வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம் ஹால்தீன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம், விவசாயப் போதானாசிரியர் க.தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (இ)

CIMA (ஏ/8441)
Chartered Institute of Management Accountants
@ Wisdom
021 2220727 | 021 7200777

# துப்பாக்கி சூடு ஒருவர் காயம்



கெஸ்பேவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் இருந்து தப்பியோட முயற்சித்த கைதி ஒருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டுள்ளனர்.

இதன்போதே, குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் உதவியாளர்களுக்காக விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 2012 ஆம்ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டிற்குள் ஆசிரியர் பயிற்சியினை முடித்து வெளியேறிய ஆசிரியர் உதவியாளருக்கான கலந்துரையாடல் ஆசிரியர் சேவை 3-IIக்குள் உள்வாங்கப்படுதல் தொடர்பான நடவடிக்கையினை மேற் கொள்ளவுள்ளதால் தங்களின் நியமனக்கடிதம் மற்றும் அடையாள அட்டை போட்டோ பிரதியினை கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இத்திகதியில் சமுகமளிக்கத் தவறுவோர்களுடைய பெயர் விபரம் பெயர் பட்டியலில் இடம்பெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மன்னார் இசை மாலைத் தாழ்வு கிராம மக்கள் இந்திய துணை தூதுவரிடம் மகஜர் கையளிப்பு

(குருமன்காடு)

மன்னார், இசைமாலைத்தாழ்வு கிராம மக்கள் தமக்கான இந்தியன் வீட்டுத்திட்டம் கிடைக்க வில்லை எனவும்இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டு இந்திய துணைத்தூதர் சு.தட்சணா மூர்த்தியிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

வவுனியா தம்பர் விருந்தினர் விடுதியில் இந்திய துணைத்தூ தருக்கும் குறித்த கிராம மக்களுக்கும் இடையில் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இசை மாலைத்தாழ்வு கிரா மத்தில் தாங்கள் மீள் குடியேறி பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமக்கான இந்திய வீட்டுத்திட்டம் இதுவரை வழங்கப்பட வில்லை.இது தொடர்பில் அரச அதி காரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் எவரும் பதில் தரவில்லை. ஏன் எமக்கு வழங்கப்படவில்லை என்ற காரணம் கூட எமக்கு தெரியப்படுத்தப் படவில்லை. எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம் மஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தன்னால் முடிந்தளவு முயற்சிகளை எடுப்பதாகவும் சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் இக் கிராமத்துக்கு சமுக மளிப்பதாகவும் இந்திய துணைத்தூதர் இசை மாலைத்தாழ்வு கிராம மக்களுக்கு உறுதியளித்தார்.

இதேவேளை, இந்திய அரசின் நிதி உதவியில் வவுனியா வைத்தியசாலையில் சகல வசதிகளுடனும் கூடியதாக கட்டப்படும் வைத்தியசாலை கட்டுமானப் பணிகளையும் இந்திய துணைத்தூதர் பார்வையிட்டார்.(2-250)

## இராசி பலன்

12.09.2014 ஆவணி 27, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.04 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 12.54 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்**: வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியமொன்றில் சில திருப்பங்கள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**: பிரியமான சிலருக்காக சில செலவுகளை மேற்கொள்வீர்கள், பொறுப்பாக வேலைகளை செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது.

**மிதுனம்**: பண வரவு எதிர்பார்த்த படியே வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், சுப செய்திகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்**: எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும்.

**சிம்மம்**: சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பயணங்கள் எளிதில் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி**: கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.

**துலாம்**: பிற இனத்தவரால் பொருட்கள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், நண்பர்கள் [illegible]ண்டு, குடும்ப மகிழ்ச்சி த[illegible] நாள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்**: நேற்று பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உடன் பிறப்புக்கள் உத[illegible] [illegible] வருமானம் [illegible] தரும். தேக நலன் சீராகும்.

**தனுசு**: கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் மத்தியில் அன்பு தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்.


**மகரம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்**: தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்**: விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வருங்கால நலன்கருதி சேமிக்க நினைப்பீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் ஜனாதிபதியுடன் அமைச்சர் சுஷ்மா சந்திப்பு



மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானுக்கு சென்று பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி ஹமீது கர்சாயுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் விரைவில் வெளியாகி, ஆட்சி மாற்றம் ஏற்பட உள்ளது. இதுபற்றியும் விவாதித்தனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து 'நேட்டோ' படைகள் இந்த ஆண்டு இறுதியில் வெளியேறுகின்றன. அதன்பிறகு, தலிபான்கள் மற்றும் அல்கொய்தா தொடர்புடைய தீவிரவாத இயக்கங்களின் ஆதிக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அத்தகைய சூழ்நிலையில், இந்தியாவின் உதவியை ஹமீது கர்சாய் கோரினார். இராணுவ தளபாடங்களையும், ஆயுதங்களையும் இந்தியா அளிக்க வேண்டும் எனறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு சுஷ்மா சுவராஜ், எத்தகைய சவாலையும் சந்திக்க தேவையான உதவிகளை இந்தியா அளிக்கும் என்று உறுதி அளித்தார். மேலும், ஆப்கானிஸ்தானில் மேற்கொண்டு வரும் மறுகட்டுமான பணிகளில் இந்தியா தொடர்ந்து ஈடுபடும் என்றும் கூறினார். பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை விரைவுபடுத்துவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

வர்த்தக உறவை விரிவுபடுத்துவது பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு இரு தலைவர்களும் சம்மதம் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் ஹீரத் மாகாணத்திலும், காபூலிலும் உள்ள இந்திய தூதரகங்கள் ஏற்கனவே தாக்கப்பட்டுள்ளன. எனவே, இந்திய சொத்துகளுக்கு போதிய பாதுகாப்பு அளிக்குமாறு ஹமீது கர்சாயிடம் சுஷ்மா சுவராஜ் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்காவுடனான இரு தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஆப்கானிஸ்தான் கையெழுத்திட மறுத்தது பற்றியும் இரு தலைவர்களும் விவாதித்தனர். (இ)

# 13 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபருக்கு நீதிமன்று பிணை

(கரணவாய்)

குடிநீர் எடுப்பதற்கு சென்ற 13 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகப்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட 27 வயதுடைய இளைஞர் ஒருவரை ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல யாழ். சிறுவர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி கரவெட்டி இராஜ கிராமம் பகுதியில் உள்ள குறித்த சிறுமி பொதுக் கிணற்றில் குடிநீர் எடுக்க சென்ற வேளை அச்சிறுமியை அதே இடத்தினைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் அருகிலுள்ள பற்றைக்குள் கொண்டு சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இதனை அறிந்த சிறுமியின் பெற்றோர் நெல்லியடி பொலிஸ் பிரிவில் வழக்குத்தாக்கல் செய்து அவ் இளைஞன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து இவ்வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.சிறுவர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிபதியால் குறித்த இளைஞன் ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் இளைஞரின் இரத்த மாதிரி மரபணு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கபட்டதுடன் வழக்கு மீண்டும் ஒக்டோபர் மாதம்17 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-60)





உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் தபாலக உத்தியோகத்தர்கள் நடமாடும் சேவையொன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளனர்.

ஒக்டோபர் 9 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உப அஞ்சல் தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில் நேற்று காலை 9 மணியளவில் சுன்னாக தபாலதிபர் சி.சிவநேசன் தலைமையில் சுன்னாகம் சிவன் கோவிலில் இருந்து ஆரம்பித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினூடாக சுன்னாகம் நகரம் முழுவதும் நடமாடும் சேவையினை நிகழ்த்தியுள்ளனர்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என். ரட்ணசிங்கம், பிரதி அஞ்சல் உத்தியோகத்தர் புஸ்பநாதன், திருமதி பிரபாகரன், கணக்கீட்டு காரியாலய உத்தியோகத்தர் சிவாகரன், போதனா ஆசிரியர் ராகுலன், நிர்வாக காரியாலய உத்தியோகத்தர் அனுஷா மற்றும் உதவி தபாலதிபர் அனடாய சீலன் ஆகியோர் சுன்னாக தபாலக உத்தியோகத்தர் சகிதம் கலந்து கொண்டனர்.

## கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தால் நடத்தப்படும் கல்வித்தொழினுட்பவியலாளராக ஆசிரிய கல்வியாலாளர் குறுங்காலகற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விப்பணிப்பாளர்கள் ஆகிய கல்விப்புலம் சார்ந்த ஆளணியினர் இக்கற்கை நெறியினை தொடரமுடியும்.

விண்ணப்பப் படிவங்களை கடந்த 8ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

## சிறந்த பண்ணையாளருக்கு விண்ணப்பம் கோரல்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட பண்ணையாளர்களுக்கு சிறந்த பண்ணையாளர் விருது வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலக அதிகாரி அறிவித்துள்ளார்.

இதில் ஆடு, மாடு, கோழி போன்றவற்றில் சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்படவுள்ளன.

எனவே சிறந்த பண்ணையாளர் விருதைப் பெற விரும்புவர்கள் கால்நடை வைத்திய அலுவலகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை பெற்று பூர்த்தி செய்தல் வேண்டும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (செ-60)

# பதிவுள்ள வெளிநாட்டு முகவர்கள் வட மாகாணத்தில் எவருமில்லை

## வெளி.வேலைவாய்ப்பு வட மாகாண பணியகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பதிவு செய்ப்பட்ட வெளிநாட்டு முகவர்கள் என்று யாருமில்லையென வட மாகாணத்திற்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் தம்பித்துரை கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு முகவர்கள் என யாரும் இங்கு இல்லை.

அதிகளவிலானோர் இங்கு வெளிநாட்டு உப முகவர்களாகவே உள்ளனர். அதனால் தான் இங்கு பலர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி ஏமாற்றப்படுகின்றனர்.

பதிவு செய்யப்படாத நிறுவனங்களிற்கு எதிராக நாம் முறைப்பாடு எடுக்கமுடியாதுள்ளது.

பதிவு செய்யப்படாத நிறுவனங்களிற்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்வதன் மூலம் பொலிஸாரே அது தொடர்பில் நடவடிக்கையெடுக்க முடியும்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் தொடர்பில் எம்மிடம் முறைப்பாட்டு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்னர் ஆண்களுக்கு 05 நாள் தொழிற் பயிற்சி எமது பணியகத்தினால் வழங்கப்பட்டும் வருகின்றது.

எதிர்வரும் 07 ஆம் திகதியன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கொன்றும் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார். (செ-4)

# இந்து சமுத்திர நாடுகளை மீண்டும் சுனாமி தாக்கும்

(நியூயோர்க்)

இலங்கை மற்றும் இந்து சமுத்திர நாடுகள் மற்றுமொரு கடுமையான சுனாமிப் பேரலைத் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம திகதி ஏற்பட்ட 9.2 ரிச்டர் அளவிலான பூகம்பம் காரணமாக ஏற்பட்ட சுனாமியினால், இலங்கை, இந்தியா உட்பட சுனாமி தாக்கிய நாடுகளில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இதனை விட மிகப் பெரிய சுனாமிப்பேரலை தாக்கத்தை இந்நாடுகள் எதிர்காலத்தில் எதிர் நோக்கக் கூடும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின்மியாமி பல்கலைக்கழகத்தை சேர்ந்த கெலி ஜெக்சன் உள்ளிட்ட ஆய்வு குழுவினர் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

அதேபோல் இந்தியா, ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் புவி தட்டுகளையும் இவர்கள் ஆய்வு செய்துள்ளனர்.

இதன அடிப்படையில், அண்மைய காலத்திலும் கடந்த காலங்களிலும் பூமியில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி தாக்கங்களை ஆராய்ந்து இவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். (செ-11)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மஹா கணபதி பிள்ளையார் கோயிலின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் அபிசேகத்துடன் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து அன்றைய தினம் மோதக பூஜையும் நடைபெறும். (செ)

## நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் அட்டவணைப் படுத்தப்படாத தற்செயல் சிற்றூழியர் பதவிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் இடம் பெறவுள்ளது என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் க.கனகதுரை மற்றும் தலைவர் பொ.வியாகேசு ஆகியோர் அறிவித்துள்ளனர். (செ-60)

## பரீட்சை நிலைய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்கான இறுதிப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவதுறை பரீட்சை மண்டபத்திலும், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலகு பரீட்சை மண்டபத்திலும் நடைபெறும் என்பதை யாழ்.பிராந்திய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 வயது சிறுமி பாலியலின் பின் படுகொலை

(காத்தான்குடி)

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பொலிஸ் பிரிவிலுள்ள மஞ்சந்தொ டுவாய் குவைத் சிற்றி எனும் பகுதியல் நேற்று முன்தினம் புதன்கிழமை 8 வயதுச் சிறுமியொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக காத்தான்கு டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி பாலியல் வல்லு றவுக்குட் படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டிருக்கலாமென பொலி ஸார் சந்தேகம் தெரிவித்தனர். சிறுமியின் சடலம் பிரேத பரி சோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கொலையுடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைது செய்யும் பணியில் ஈடுபட்டு வருவ தாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தால் காத்தான்குடி நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (இ)

# பச்சை மிளகாய் சவால் புத்திக எம்.பி.விடுப்பு

(கொழும்பு)

இலங்கை நிதியை வெளிநாடுகள் பெற்றுக் கொள்ளும் பிரமீட் வேலைத்திட்டங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு உதவுவதற்காக நிதி சேகரிக்கும் வகையிலும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் பச்சைமிளகாய் சவாலை எதிர்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பதிரண, அழைப்பு விடுத்துள்ளார்.

மூன்று பச்சைமிளகாய்களை 2 நிமிடத்துக்குள் சாப்பிட்டு முடிக்க வேண்டும் என்பதே இந்த சவாலாகும். இந்த சவாலை நேற்று எதிர்கொண்டு மூன்று பச்சை மிளகாய்களை சாப்பிட்ட புத்திக எம்.பி. இந்த சவாலை எதிர்கொள்ளுமாறு மேலும் ஐவருக்கு அழைப்பு விடுத்தார்.

கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும, மேல் மாகாணசபை உறுப்பினர் அநுர தீபால், ஊடகவியலாளர் சமன் பிரியங்கர, கலைஞர் காவிந்த பெரேரா ஆகியோருக்கு புத்திக எம்.பி. இவ்வாறு சவால் விடுத்துள்ளார். (இ)

# 10 இலட்சம் சன்மானம்

(கொழும்பு)

கனேவத்தை, அம்பகொலவெவ பிரதேசத்தில் கடத்தப்பட்டதாக கூறப்படும் நான்கு வயது சிறுமியான பமாரா கேஷனி பண்டார தொடர்பில் சரியான தகவலை தருவோருக்கு 10 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த தீர்மானத்தை பொலிஸ்மா அதிபரே எடுத்துள்ளதாக தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பமாரா கேஷனி பண்டார என்ற நான்கு வயது சிறுமி, கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை, தனது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருந்த போது கடத்தப்பட்டுள்ளார். (இ)

## தசாக கிருஹயக்ஞ (வீட்டுக்கிருத்திய) அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் ஜய வருடம் ஆவணி மாதம் 19-ம் நாள் (04.09.2014) வியாழக்கிழமை தசமித் திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

**ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா**

அவர்களின்

தசாஹாதி ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| 13.09.2014 | சனிக்கிழமை | - தசாகம் |
| 14.09.2014 | ஞாயிற்றுக்கிழமை | - ஏகோதிஷ்டம் - மாசிகம் |
| 15.09.2014 | திங்கட்கிழமை | - சபிண்டீகரணம் |
| 16.09.2014 | செவ்வாய்க்கிழமை | - கிருஹயக்ஞம் |

மேற்படி எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் 16.09.2014 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் சமாராதனையில் (மதிய போசனம்) கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அழைக்கிறோம்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(7757)

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)

### STILL PHOTOGRAPHY AND VIDEO FOR GENERAL CONVOCATION-2014

1. The Chairperson, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography and Video to cover the Annual General Convocation- 2014 of the University of Jaffna which is scheduled to be held on 6th & 7th of October,2014.

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.

3. Interested bidders may obtain further information from the Assistant Registrar/ Academic Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the Same address on any working day from 9.00 hrs to 16.00 hrs. Contact number: 021 222 6500

4. complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Registrar/ Academic Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna, until 22nd September, 2014 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees one thousand (Rs.1,000/-).

5. Sealed Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O.Box 57 or be deposited in the Tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on 23rd September, 2014, Bids will be opened soon after closing at 14.00 hrs on 23rd September, 2014 at the Board room of the vice Chancellor in the presence of the bidder or bidders' representatives who choose attend.

6. Bids shall be valid at least for a period of 45 Days from the date fixed for receiving of bid or any extended date.

7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
In the form included in the Bidding document.
In favour of ' Vice Chancellor, University of Jaffna'
For a amount of Rs.10,000/=
Issued by one of the agencies acceptable to the client.

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 18<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: BSc, MSc, MBA<br>தொ.இ: B/3562 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 13 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BIO/(LONDAN PR)<br>தொ.இ: G/2725 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 53 ½ சூரி செவ் 2 இல்<br>உயரம்: 170 cm<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3563 | பிறப்பு: 1981 இந்து<br>கி.பா: 5 1/4<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: ஆயுர்வேத மருத்துவர்<br>தொ.இ: G/2726 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MSC/ பொறியியளாளர்<br>தொ.இ: B/3564 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 53 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில: B.A<br>தொ.இ: G/2728 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 46<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: வங்கி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/3566 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 55 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில:B.A/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:, உள்நாடு<br>தொ.இ: G/2730 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் முப்பது பேர் தலைமன்னாரில் நேற்றுக் கைது

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய மீனவர்கள் 30 பேரை தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைதுசெய்ததாக மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வி.ஸ்.மெராண்டா தெரிவித்தார்.

6 படகுகளில் வந்த இந்த மீனவர்களை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்த மீனவர்கள் விசாரணைக்காக தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் 30 மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் ஒப்படைக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, கடந்த திங்கட்கிழமை இரவு தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட ஒரு சிறுவன் உட்பட இந்திய மீனவர்கள் 6 பேரும் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது 6 மீனவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டுள்ளார். (இ)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

# 3 ஆம் இடம்

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு சித்திரப் போட்டியில் யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தை சேர்ந்த ம.அனிஸ்ரன் (தரம்- 8) 3 ஆம் இடத்தையும் ஞா.சர்மிலன் (தரம்- 8) 5 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (இ)

# வீதியால் சென்றவர் மீது தாக்குதல்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொடிகாமம் நெல்லியடி வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தவர் மீது, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் மூவர், நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்த எம்.ரஜனிகாந்த் (வயது 22) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர், கொழும்பிலிருந்து தனது சகோதரியுடன் பேருந்தில் வந்திறங்கி மேற்படி வீதியால் வீடு சென்று கொண்டிருக்கும் போதே இந்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் வேலணை பிரதேசத்தில் கலை மன்றங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தில் சிவகலை மன்றத்திற்கான பதிவு சான்றிதழ் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது வேலணை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் பயனாளி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதையும் அருகில் கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசன் நிற்பதை படத்தில் காணலாம்.

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 |
| தக்காளி | 40 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 90 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 90 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 50 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 60 |
| போஞ்சி | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 133

Search for people, places and things Nagendram Home

டொறின் மன்மதநாயகம்




ராகுலன் பாலா




ஐது ஐது

பொண்ணுங்க காதல் ஆட்டோ மாதிரி, கை காட்டினா நிறைய வரும். சீக்கிரம் வரும்... சீக்கிரம் போயிடும்.



ஆனா பசங்க காதல் திருவிழா தேர் மாதிரி, மெதுவா தான் வரும்... வந்தா எல்லாரும் கையெடுத்து கும்பிற மாதிரி இருக்கும்..

ராஜா ராணி





பகுத்தறிவுப் பகலவன்

மனிதா இதுதான் உன் அறிவா!!! இந்த அறிவியல் யுகத்திலும் நீ மாறவில்லை என்றால் நீ மாறுவது எப்போது?



ஜனுஷன் ஜெயபாலசிங்கம்

அம்மா, நாங்க புதுசா முதியோர் இல்லம் ஆரம்பிக்கப் போறோம், உங்களால் ஏதாவது தர முடியுமா?



தாராளமா, என்னோட மாமியாரையும் மாமனாரையும் தர்றேன்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணசபை பேரவையின் புதிய செயலாளராக சிவபாதம்

(யாழ்ப்பாணம்)


வடமாகாண சபை பேரவையின் புதிய செயலாளராக இலங்கை நிர்வாக சேவைகள் தரம்-I ஐச்சேர்ந்த அ.சிவபாதம் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் கடமையாற்றி வந்த கே.கிருஸ்ணமூர்த்தி தனது ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் அப்பதவியிலிருந்து விலகியதையடுத்து அப்பதவி வெற்றிடத்துக்கு அ.சிவபாதம் நியமிக்கப்பட்டுள்ளார் என வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தொடர் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது இந்தப் பதவி மாற்றம் பற்றி அறிவிக்கப்பட்டது.

புதிய பேரவை செயலாளராக இலங்கை நிர்வாக சேவைகள் தரம்-I ஐச் சேர்ந்த அ.சிவபாதம் முதல் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாக சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண சபை 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கிருஸ்ணமூர்த்தியே வடமாகாண பேரவை செயலாளராக கடமையாற்றி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)




## வெள்ளைப்பிரம்பு தின ஒழுங்கமைப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடத்துவது தொடர்பான ஒழுங்கமைப்புக் கூட்டம் நாளை மறுதினம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகத்தில் பிராந்தியம் 11 இன் லயன்ஸ் கழக ஜிஎம்ரிஉறுப்பினரும் வெள்ளைப் பிரம்புதின ஒழுங்கமைப்பாளருமாகிய லயன்ஸ் செ.மகாதேவா தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ




# பொலிஸார் தமது கடமைகளை சரிவரச் செய்ய தவறிவிட்டனர்

## வடக்கு மாகாண சபை குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள போக்குவரத்து பொலிஸார் தமது கடமைகளினை சரியாக செய்யவில்லையென வடக்கு மாகாண சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டினை வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனும் ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனும் முன்வைத்துள்ளனர்.

அண்மையில் அச்சுவேலி நவக்கிரியில் டிப்பர் வாகனம் ஒன்று மோதி கர்ப்பிணிப்பெண்ணொருவர் உயிரிழந்ததனையடுத்து டிப்பர் வாகனம் பொதுமக்களினால் எரிக்கப்பட்டதனை தொடர்ந்து அப்பகுதி இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்படுவதற்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 15 ஆவது அமர்வு நேற்று மு.ப 9.30 மணியளவில் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

குறித்த விபத்துச் சம்பவத்தில் விபத்துக்குள்ளான சான்றுகளினை பொலிஸார் அழிக்க முயன்றுள்ளனர்.

இதேபோல் பல இடங்களில் இத்தகைய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

எமது மக்கள் பொலிஸாரின் நியாயமற்ற செயற்பாடுகளினால் தண்டிக்கப்படுவதனையும் அச்சுறுத்தப் படுவதையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

போக்குவரத்து பொலிஸ் தமது கடமையினை சரியாக செய்யவில்லை. வழியனுமதிப்பத்திரம் இல்லாத வாகனங்களினையும் இலஞ்சம் பெற்று கொண்டு பயணிப்பதற்கு அனுமதிக்கின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினார். (இ-4)

## 100 ஆவது அகவை நிறைவுவிழா நிகழ்வு

பண்டிதர் இணுவிலூர் அளவை வாசர் வை.க.சிற்றம்பலத்தின் 100 ஆவது அகவை நிறைவு விழா நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு 34, வட்டுவினி ஒழுங்கை இணுவில் நடைபெறவுள்ளது. (இ

## மணிவிழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தனின் மணிவிழாவும் மலர் வெளியீட்டு நிகழ்வும் நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி றிஜ்வே மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி.சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ



பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையை ஊடறுத்துச் செல்கின்ற புகையிரதப் பாதையில் பாதுகாப்பான புகையிரக் கடவை அமைத்துத் தருமாறு அப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைத்து தருவதாக அப்பகுதி மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

(படம்:-உ.சாளின்)

# இன அழிப்புக்கு அஞ்சுவது ஏன்?

## சிவாஜிலிங்கம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையில் "இன அழிப்பு" என்ற வார்த்தையை பயன்படுத்துவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அஞ்சுவது ஏன்? என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார்.

வடமாகாண சபையின் மாதாந்த கூட்டத்தொடர், கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபை கட்டட தொகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றது.

இதன்போது, "தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்துமாறு வேண்டுகோள்" என்ற பிரேரணையை சிவாஜிலிங்கம் சபையில் முன்வைத்தார்.

எனினும், அந்த பிரேரணையில் இடம்பெற்றுள்ள இனப்படு கொலை என்ற சொற்பதம் காரணமாக சட்ட சிக்கல்கள் ஏற்படும் எனவும் இது நிருபிக்கப்பட்டு சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே அந்த வார்த்தையை பயன்படுத்த முடியும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கையிலே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

"இரண்டு இனங்களுக்கும் இடையில் கலவரம் ஏற்பட்டு இரண்டு இனங்களி லும் இழப்புக்கள், நட்டங்கள் ஏற்பட்டாலே. அது இனக்கலவரம்.

1983 ஆம் ஆண்டு இடம் பெற்ற அவ்வாறானதொரு இனக்கலவரத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் என பல விடயங்களை நினைவுபடுத்தினார். (இ-4)

## மாமனைத் தாக்கிய மருமகன்களுக்குப் பிணை

(கரணவாய்)

யாழ். துன்னாலை குடவத்தை பகுதியில் மாமனாரை தாக்கிய இரு மருமகன்களையும் தலா 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்ல பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் நேற்று முன்தினம் அனுமதியளித்தார்.

அத்துடன், இது தொடர்பிலான வழக்கை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி மாமனார் வீட்டிற்கு சென்ற மரு மகன்கள், மாமனாரை கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த மாணிககம் புஸ்பன் (வயது 40) என்ற நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று, கடந்த செவ்வாய்க்கிழமை வீடு திரும்பியதும் மருமகன்கள் தாக்கியமை தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் இரு மருமகன்களும் கைது செய்யப்பட்டு, நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, நீதவான் சந்தேக நபரகளான மருமகன்கள் இருவருக்கும் பிணை வழங்கினார். (இ-60)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளை வங்கியில் வைப்பிலிட விசேட நடவடிக்கை

## கரவெட்டி பிரதேச செயலர் தகவல்


மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவை வங்கியில் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியத் திணைக்கள 11/2014 இலக்க 26-08-2014 ஆம் திகதி சுற்று நிருபத்திற்கு அமைவாக அனைத்து ஓய்வூதியர்களதும் மாதாந்த ஓய்வூதியம் துரித இணைய வங்கிச் சேவை ஊடாகவே செப்டெம்பர் 2014 தொடக்கம் ஓய்வூதிய திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் மாதங்களுக்கு ஓய்வூதிய பற்றுச்சீட்டு (Pension Voucher) அனுப்பி வைக்கப்படமாட்டாது என்பதுடன் ஓய்வூதியர்களது மாதாந்த ஓய்வூதியம் கணனிமயப் படுத்தப்பட்ட சேமிப்பு கணக்கிலக்கத்திற்குதுரித இண்ணய சேவைமூலம் வரவு வைக்கப்படும் என்பதனை அனைத்து ஓய்வூதியர்களுக்கும் அறியத்தருவதோடு ஓய்வூதியர்கள் தமது மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக்கொண்டமை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், இவை தொடர்பாக தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு பிரதேச செயலக ஓய்வூதிய கிளையை நாடுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூப்பர் ஷோட்ஸ்






ஹலோ சார்- ஜிம்பாவே
நாட்டின் மலிங்கே
காப்பகத்தில் குட்டி
காண்டா மிருகம்

வெரி ஸ்மார்ட்- டூரிஸ்ரிடம்
திருடிய போனை ஆப்ரேட்
பண்ணும் ஜப்பானிய
மெக்காக் குரங்கு....

## 09.2014 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 490 -கிரேக்கம் மரதன் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் பாரசீகத்தைத் தோற்கடித்தது. பிடிப்பிடஸ் என்ற கிரேக்க வீரன் இவ்வெற்றிச் செய்தியைத் தெரிவிக்க நெடுந்தூரம் ஓடினான். மரதன் ஓட்டப்போட்டிக்கு இதனாலேயே இப்பெயர் இடப்பட்டது.
- 1609 -ஹென்றி ஹட்சன் ஹட்சன் ஆற்றைக் கண்டுபிடித்தார்.
- 1683 - ஓட்டோமான் பேரரசைத் தோற்கடிக்கும் முயற்சியில் பல ஐரோப்பிய நாடுகள் வியட்நாவில் இடம்பெற்ற போரில் ஒன்றிணைந்தன.
- 1759 - பிரித்தானியப் படையினர் கியூபெக் நகரைக் கைப்பற்றினர்.
- 1848 - சுவிட்சர்லாந்து கூட்டமைப்பு ஆட்சியை நடைமுறைப்படுத்தியது.
- 1890 - ரொடீசியாவில் சலிஸ்பரி நகரம் அமைக்கப்பட்டாது.
- 1933 - அணுக்கரு தொடர்வினை குறித்த கருத்தை முதன் முதலாக லியோ சிலார்ட் அறிவித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: நட்பு நாடுகளின் போர்வீரர்கள், இத்தாலியப் போர்க்கைதிகள், மற்றும் பொதுமக்களை ஏற்றிச் சென்ற லக்கோனியா என்ற கப்பல் மேற்கு ஆபிரிக்காவில் ஜேர்மனியர்களால் தாக்கப்பட்டு மூழ்கியது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி வீட்டுக்காவலிலிருந்து ஜேர்மனிய படைத்தளபதி ஒட்டோ ஸ்கோர் செனி என்பவனால் விடுவிக்கப்பட்டார்.
- 1953 - நிக்கிட்டா குருசேவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1959 - லூனா 2 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் ஏவியது. சந்திரனை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1974 - எதியோப்பியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மன்னர் ஹைலி செலாசி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1980 - துருக்கியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1992 - நாசாவின் எண்டெவர் விண்ணோடம் கருப்பு- அமெரிக்கப் பெண்ணான மேய் சரோல் ஜமிசன் என்பவருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2001 -ஆஸ்திரேலியாவின் மாநிலங்களுக்கிடையேயான முதலாவது பயணிகள் போக்குவரத்து விமான சேவையான ஆன்செட் ஆஸ்திரேலியா மூடப்பட்டது. 10,000 பேர் வேலையிழந்தனர்.
- 2005 - இஸ்ரேல் காசாப் பகுதியில் இருந்து தனது படைகளை முற்றாக விலக்கியது.
- 2005 - ஹொங்கொங்கில் ஹொங்கொங் டிஸ்னிலாண்ட் திறக்கப்பட்டது.
- 2006- திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் ஜேர்மனியில் நிகழ்த்திய உரையின் போது "தீங்கு விளைவிக்கிற மற்றும் மனிதத்தன்மையற்ற விடயங்களையே நபிகள் நாயகம் இவ்வுலகிற்கு அளித்தார்" என்று தெரிவித்தார். இதற்கு இஸ்லாம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து திருத்தந்தை மன்னிப்புக் கேட்டார்.


### பிறப்புகள்

- 1832 - சி. வை. தாமோதரம்பிள்ளை, தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி, (இ. 1901)
- 1913 - ஜெசி ஓவென்ஸ், அமெரிக்க தடகள ஆட்டக்காரர் (இ. 1980)
- 1943 - மைக்கல் ஒண்டாச்சி, இலங்கையில் பிறந்த எழுத்தாளர்
- 1969 - கப்டன் மொறிஸ், விடுதலைப் புலிகளின் போராளி (இ. 1989)
- 1980 - யாவ் மிங், சீனக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1612 - நான்காம் வசீலி, ரஷ்யப் பேரரசன் (பி. 1552)
- 2009 - நார்மன் போர்லாக், அமைதிக்கான நோபல் பரிசு வென்றவர் (பி. 1914)

கலர் ஸ்பைடர்- ரவிப்பிரகாஷின் க்ளிக்



(முற்றும்)

## அன்புச் சுட்டிகளே!

உங்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களை, நீங்களும் சிறுவர் பக்கத்தில் - சுட்டி மனசு- பகுதியில் பதிவு செய்துகொள்ளலாம்.

### நீங்கள் செய்ய வேண்டியது....

உங்களால் மறக்க முடியாத சம்பவத்தைத் தெளிவாக எழுதி, முழுப்பெயர், கல்வி கற்கும் பாடசாலை, தரம், உங்கள் புகைப்படம், உங்கள் வீட்டு முகவரி, உங்கள் வீட்டு தொலைபேசி இலக்கம் என்பவற்றை,



ஆசிரியர்,சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல 03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

62

...இது குறித்து அசாருதீன் ஸ்போர்ட்ஸ் ஸ்டார் பத்திரிகையில் எழுதியதாவது, நானும் சித்துவும் ஆக்லாந்து நகர வீதிகளில் ஷாப்பிங் செய்துகொண்டிருந்தோம். ஷாப்பிங் முடித்து இரவு திரும்பும்போது கூட எந்த சிக்கலுமில்லை. ஆனால், அடுத்தநாள் காலை சித்து எழுந்து கொள்ளும்போது தனக்கு கடுமையான கழுத்து வலி இருப்பதாகக் கூறினார். எப்படி சித்துவுக்கு கழுத்து வலி ஏற்பட்டது என்பது இதுவரை எனக்கு ஒரு புரியாத புதிர்தான். ஆனால், அதைவிட முக்கியமானது சித்துவுக்கு பதில் இன்னிங்ஸை யார் ஓபனிங் செய்வது என்பதுதான். இது குறித்து நான் வடேகர் மற்றும் கபில்தேவ் ஆகியோர் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டோம். எங்களுக்கும் வேறு மாற்று யோசனைகள் தோன்றாத நிலையில் சச்சின் இன்னிங்சை ஓபன் செய்ய அனுமதித்தோம். இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். சித்துவிற்கு கழுத்து வலி சரியானதும் மீண்டும் சித்துதான் ஓபனிங் என்று சச்சினிடம் கூறினோம். சச்சினும் கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராகவே இருந்தார். தற்காலிக வாய்ப்பு என்றாலும் நன்றாக ரன்களைக் குவித்து கிரிக்கெட் தலைமை மற்றும் வாரியத்தின் நம்பிக்கையைப்பெற்றுவிட்டால் இன்னிங்ஸ் ஓபனிங் என்னும் இடத்தை நிரந்தரமாகத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்று கணக்குப்போட்டார். சச்சின் போட்ட கணக்குத் தவறவில்லை. நினைத்ததை சாதித்தார் என்றுதான் கூறவேண்டும் என்று கட்டுரையை முடிக்கிறார் அசாருதீன்.

> சச்சின் சுழற்பந்து வீச்சாளர் என்று அடைமொழி குத்தப்பட்டு இருந்தாலும் சச்சின் வீசும் ஒவ்வொரு பந்தும் ஒவ்வொரு ரகமாக இருக்கும். லெக்ஸ்பின், ஆஃப்ஸ்பின், கூக்ளி, மிதமான வேகம், மெதுவான பந்து என சச்சின் எந்த ரகமான பந்து வீச்சாளன் என அவருக்கே தெரியாத அளவிற்கு ஒரு பௌலர்!




சச்சின் ஆடும் எழுபதாவது ஒருநாள் போட்டி இது. நியூசிலாந்து மொத்தம் 142 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. வழக்கமாக ஜடேஜாவும் சித்துவும்தான் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்குவார்கள். இப்போது சித்துவிற்கு பதில் சச்சின். அன்று சச்சின் ஆடிய அதிரடி ஆட்டம் நியூசிலாந்தையே குலுங்க வைத்துவிட்டது. இத்தனைக்கும் நியூசிலாந்து அணியில் மோரிசன், ப்ரிங்ளே, லார்சன், ஹாரிஸ் என திறமையான பௌலர்கள் பலர் இருந்தார்கள். யாராக இருந்தால் எனக்கென்ன என்ற பாணியில் சச்சின் 49 பந்துகளில் 82 ரன்கள் வெளுத்துக் கட்டினார். வெறும் 23 ஓவர்களிலேயே இந்தியா 143 ரன்களை சுலபமாக எடுத்து வெற்றிபெற்றது. மீதம் இன்னும் 26 ஓவர்கள் பாக்கி இருந்தது. அதுவரை நியூசிலாந்து விமர்சகர்கள் சச்சின் அதிரடி ஆட்டம் பற்றிக் கேள்விப்பட்டதோடு சரி, சச்சின் ஆட்டம் அவர்களுக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாகப் பதிவாகியது. இந்தப் போட்டியில் சச்சின் மற்றுமொரு சாதனையையும் நிகழ்த்த எண்ணினார். ஆனால் முடியவில்லை. ஒருநாள் போட்டிகளில் உலக சாதனையாக அதிவேக

### பௌலராக சச்சின் புதிய அவதாரம்

மான செஞ்சுரியை அடித்தது நம்மூர் அசாருதீன் (61 பந்துகளில் 100 ரன்கள்) 49 பந்துகளில் 82 ரன்கள் என்ற நிலையில் அசாருதீன் சாதனையை முறியடிக்க முயற்சித்தார். ஆனால், கொஞ்சம் அவசரப்பட்டதால் காட்ச் கொடுத்து ஆட்டம் இழந்தார். இல்லாவிட்டால் நியூசிலாந்து மண்ணில் சச்சின் ஒருநாள் போட்டிகளில் மற்றுமொரு சாதனையை நிகழ்த்தியிருப்பார்.

வெலிங்டனில் நடந்த அடுத்த போட்டியிலும் ஜடேஜா (56), சச்சின் (63) ஜோடி 103 ரன்கள் சேர்த்தது. இந்தியா 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. க்ரைஸ்ட்சர்ச்சில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இருவரும் வெற்றிகளைச் சமமாக பகிர்ந்து கொண்டதால் தொடர் டிராவில் முடிந்தது.

சித்து கழுத்து வலி சரியாகி மீண்டும் ஆட வந்தபோது அவரை மூன்றாவது அல்லது நான்காவது ஆட்டக்காரராகவே அசாருதீன் அனுப்பி வைத்தார். இப்படியாக சச்சின் தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு தனது கனவான துவக்க ஆட்டக்காரர் என்ற பதவியை நிரந்தரமாக்கிக் கொண்டார்.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 15

பரமஹம்ஸ சுவாமி

...உங்கள் புத்திக்கு அப்பால் நுண்ணறிவு நிகழும் பொழுது உங்கள் முழு இருப்புத் தன்மையும் ஒருங்கிணைக்கப் படுகிறது. நீங்கள் உங்கள் உச்சத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் உச்சத்தில் இருக்கும் பொழுது ஏதோ ஒன்று திறக்கிறது. நீங்கள் அதை வெளிப்பாடு என்றோ அல்லது நுண்ணறிவு என்றோ அல்லது ஏதோ ஒன்று என்றோ அழைக்கலாம்.

யோகிகள் இது ஒரு விஞ்ஞானம் என்று மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். உங்கள் இருப்புத்தன்மையிலிருந்து தொடர்ந்து கிடைக்கும் இந்த நுண்ணறிவு அல்லது இந்த ஆற்றலுடன் உங்களால் இசைந்திருக்க முடியுமானால் உங்களால் இதை தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க முடியும்.

நுண்ணறிவு உங்கள் இருப்புத் தன்மையின் ஆற்றல் இந்தத் தூய சக்தியானது விழிப்பற்ற பகுதியிலிருந்து வரத் தொடங்கும் பொழுது உங்களை உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் மற்றும் உணர்ச்சிரீதியாகவும் குணப்படுத்துகிறது. குணப்படுத்துதல் மட்டுமன்றி மன அழுத்தத்தைக் குறைத்து தன்னிச்சையாகத் தீர்மானங்களை எடுக்கவும் உதவுகிறது. தன்னிச்சையாக இருப்பது நீங்கள் சேமித்து வைத்திருக்கும் தகவல்களைப் பொறுத்ததல்ல. அது அவற்றைப் பகுத்தாராயும் விதத்தில் இருக்கிறது.

ஒரே விதமான தகவலை ஒரே விதமான செய்திகளை பல வழிகளில் பகுத்தாராயலாம். நுண்ணறிவு என்பது உங்கள் புத்திக்கு அப்பாற்பட்டு எவ்வாறு தகவல்களைப் பகுத்தாராய்கிறீர்கள்? எவ்வாறு முடிவுக்கு வருகிறீர்கள்? என்பதை பொறுத்தது. இந்த நுண்ணறிவு ஆற்றலுடன் இசைந்து இருக்க சில உத்திகள் அல்லது வழிமுறைகளின் மூலம் நாம் நம்மைத் தயார் படுத்திக் கொள்ளலாம்.

இந்த உத்திகளையே நாம் தியானம் என்று அழைக்கப்படுகின்றோம். நம்மை அனுபவிப்பதற்காகத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துகொண்டிருக்கும் நமது இருப்புத் தன்மையிலுள்ள உயர் ஆற்றலுடன் நாம் இசைந்திருப்பதற்கு தியானம் என்ற வார்த்தையை கீழை நாடுகளில் உபயோகப்படுத்துகிறோம்.

எப்பொழுதெல்லாம் உங்களுக்கு நேரம் கிடைக்கிறதோ சற்று உங்களுடனேயே அமர்ந்து உற்றுக் கவனியுங்கள்...

நாம் நம்மைத் தவிர மற்ற அனைவருக்கும் நேரம் ஒதுக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் சற்று உங்களுடன் அமர்ந்து கவனித்தால் உங்கள் இருப்புத்தன்மையின் ஏதோ ஒரு பகுதி தன்னை [illegible] னும் சற்று [illegible] விழவதைக் காணலாம். ஆனால் நாம் நமது இரும்புத் தன்மையின் அந்தப்பகுதிக்கு என்றும் ஒரு வாய்ப்போ நேரமோ கொடுத்ததேயில்லை. நாம் நமது புத்திசாலித்தனத்தில் அதிக பிடிப்புடன் இருக்கிறோம்.

புத்திசாலித்தனமே இறுதியானது என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் யோகிகளோ புத்திசாலித்தனத்தை விட மேலான ஒன்று சாத்தியம் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றனர்.



இந்த தியான முகாம் மனம் எவ்வாறு வேலை செய்கிறது. விழிப்பற்ற நிலையில் ஆழமாகப் பதிந்துள்ள நினைவுகளை எவ்வாறு இறக்கி வைப்பது, இனி மேல் எவ்வாறு புதிய சுமைகளை ஏற்றிக்கொள்ளாமல் இருப்பது நமது இருப்புத்தன்மையின் மறைந்துள்ள ஆற்றலை எவ்வாறு எழுப்பி உள்ளுணர்விலிருந்து புத்திக்கும் பிறகு நுண்ணறிவிற்கும் செல்வது (ஏனெனில் அப்பொழுதுதான் அடிமையாக இல்லாமல் ஒரு எஜமானனைப்போல வாழ [illegible]தைப் பற்றியது.

இந்த நிகழ்ச்சி உங்கள் எல்லாம் உணர்ச்சிகளையும் வெளிச்சமிட்டுக்காட்டி உங்கள் மனதின் விளையாட்டுக்களைக் காண உதவும். நீங்கள் எவ்வாறு உங்கள் உணர்ச்சிகளை உருவாக்கிப் பின்னர் அதன் அடிமையாகி விடுகிறீர்க? என்பதைக் காட்டும். உங்கள் உணர்ச்சிகள் எவ்வாறு உடல் நிலையிலும் மன நிலையிலும் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது என்பதைக் காட்டும்.

(பரமஹம்ஸர் ஒரு வரைபடத்தைச் சுட்டிக் காட்டுகிறார்)....(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கும் அரசு

## அசாத் சாலி பாய்ச்சல்

இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கென அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை பயங்கரவாதி என்றும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கின்ற என்னை மதவாதி என்றும் அரசாங்கம் சித்திரிக்கின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் என்று கூறுகின்ற அரசாங்கம் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவராலேயே மஹிந்த ராஜ்பக்ஷ என்றவர் ஆட்சிப்பீடம் ஏறினார் என்பதனை மறந்து விடக்கூடாது என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

இன்று தமிழத் தேசியக் கூட்டமைப்பினை புலிகள் என்று ஜனாதிபதி தரப்பு சாயம் பூசுகின்றது. உண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடிகர் திலகம் சிவாஜி கணேசனை விடவும் சிறப்பாக நடிக்கின்றார்.

ஏற்கனவே கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனின் அழைப்பினை ஏற்காமல் அரசாங்கத்துடன் இணைந்து கிழக்கு மாகாண முதல்வர் பதவியை தாரை வார்த்துள்ள ரவூப் ஹக்கீம் தற்போது ஊவாவில் எம்முடன் கூட்டணி வைக்க அழைப்பு விடுத்தார். அதற்கு நான் இணங்கவில்லை. பள்ளிகளை உடைப்பவர்களுக்கு ஒருபோதும் நான் துணைப்போக மாட்டேன்.

ஊவா மாகாணத்தில் அரசாங்க கட்சியில் முஸ்லிம்களை நிறுத்த வேண்டாம். நாம் தனியாக நின்று உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தருகின்றோம் என்று ரவூப் ஹக்கீமும் றிசாத் பதியுதீனும் அரசாங்கத்திற்கு உறுதிமொழி அளித்துள்ளதாக ஒரு அமைச்சர் கூறியுள்ளார். உண்மையில் பள்ளிகளை உடைப்பவர்களுக்கு வாக்குகளை பெற்றுக் கொடுக்க அவரகள் நினைப்பது வேதனைக்குரிய விடயமாகும். மானம் உள்ள எந்த முஸ்லிமும் ரவூப் ஹக்கீம் மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோருக்கு ஆதரவாக வாக்களிக்க கூடாதென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக மட்டுமே செயற்படுவேன் என்று ரவூப் ஹக்கீம் ஒரு அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகின்றன. தேர்தல் காலங்களில் தனித்திருந்து மதவாதம் பேசுவது, வெற்றிபெற்றதும் அரசுடன் இணைந்து கொள்வது இவருக்கு புதிதல்ல. எனவே, மக்கள் இவர்களுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இல்லாத சட்டத்தை எவ்வாறு நீக்குவது

(கொழும்ப)

சரியா சட்டம் என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லாதபோது அதற்கு எதிரான கண்டனம் தெரிவித்து அதனை நீக்க வேண்டுமென்று பொதுபலசேனா கூறுவது முட்டாள்தனமான நகைப்புக்குரிய விடயமாகும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

சரியா சட்டம் என்றால் என்னவென்று தெரியாமல் அதனை பற்றிப் பேசுவது வேடிக்கையாகவுள்ளது. திருடியவர்களின் கையை வெட்டுவதுதான் சரியா சட்டம். அது இலங்கையில் உள்ளதா? உண்மையில் ஒவ்வொரு முஸ்லிமும் சரியா சட்டத்தினை பின்பற்றித்தான் நடக்க வேண்டும். ஆனால், இலங்கையில் அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் அதனை நீக்க வேண்டுமென்று பொதுபல சேனா கூறுவது அதன் காழ்புணர்ச்சியையே வெளிப்படுத்துகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்:

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சரியா சட்டங்களின் மூலமே காதி நீதிமன்றங்கள் இயங்குவதாகவும் திருமணங்கள் நடைபெறுவதாகவும் பொதுபல சேனாவினர் தெரிவித்துள்ளமை முற்றிலும் உண்மைக்கு புறம்பான ஒன்றாகும். விவாகம் மற்றும் விவாகரத்து சட்டங்கள் என்பனவே காதி நீதிமன்றங்களில் உள்ளன. இவை அரசியலமைப்பிற்கு உட்பட்டவையாகும். பாராளுமன்ற அனுமதியுடன் இவை நடைமுறைப்படுத்தப்பட்டவை என்பதனை பொதுபல சேனாவினர் தெரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஐ.நாவில் ஆதரிக்கும் கியூபா அரசிற்கு நன்றி

## வெளிவிவகார அமைச்சரிடம் நேரில் தெரிவித்தார் ஜனாதிபதி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கியூபா இலங்கைக்கு வழங்கி வருகின்ற ஆத ரவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் புருனோ எடுவர்டோ றொட்ரிகஸ் பரிய்யா கடந்த 9 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்துகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு நன்றி தெரிவித்தார்.

சர்வதேச மன்றங்களிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலும் ஆதரவு வழங்குவதற்காக நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பில் குறிப்பிட்டார்.

இதேவேளை முடியுமான அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு உதவுவதற்கு கியூபா எப்போதும் தயாராக இருப்பதாக சந்திப்பில் கருத்து வெளியிட்ட கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் புருனோ எடுவர்டோ றொட்ரிகஸ் பரிய்யா தெரிவித்தார்.

மேலும் ஆபத்தான இந்த சர்வதேச நிலைமையில் ஒத்துழைப்புக்கான வாய்ப்பு ஒன்று உள்ளது. இலங்கை மற்றும் கியூபா உறவுகளுக்கு சிறந்த எதிர்காலம் ஒன்றை காண்கின்றோம் என்றும் கியூப அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுக்கா செனவிரட்ன ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ)

# இலங்கைப் பிரஜை இந்தியாவில் கைது

## பாகிஸ்தானுக்கு உளவு பார்த்தாராம்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை பிரஜையான அருண் செல்ராஜன் என்பவர் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

அவரை கைது செய்யும் போது அவரிடம் இரண்டு கடவுச்சீட்டுக்கள் இருந்துள்ளன என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இருப்பினும் கைது செய்யப்பட்ட நபர் குறித்து மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை. அத்தோடு கைதான நபர் எந்தக் காலப்பகுதியிலிருந்து பாகிஸ்தானுக்காக உளவு பார்த்தார் என்பதும் இதுவரை கண்டறிப்படவில்லை.



2014 ஆம் ஆண்டுக்கான தேசிய புத்தகக் கண்காட்சி கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

# இனப்பிரச்சினைக்கு பிரிக்கப்படாத நாட்டுக்குள் நிரந்தரத் தீர்வு

## த.தே.கூட்டமைப்பு மீண்டும் வலியுறுத்தல்



தேசிய இனப்பிரச்சினைக்கு பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு காலக்கெடு விதித்துள்ளது.

அக்காலப்பகுதிக்குள் தீர்வு கிடைக்காவிடின் மகாத்மா காந்தி வழியில் அஹிம்சை போராட்டத்தை நடத்துவதை தவிர வேறு வழி இல்லை என்றும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களது சொந்த இடங்களுக்கு செல்லமுடியாமல் இருக்கின்றார்கள். சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் உறவினர்களின் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அரசால்சூறையாடப்பட்டு இராணுவத்தின் தேவைக்காக சொந்தமாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இன்னும் நில ஆக்கிரமிப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. மக்கள் வாழ்வதற்கான [illegible] மின்றி அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்நாட்டிலே தமிழருக்கு வாழ்வதற்கு கூட உரிமையில்லாத ஒரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்தி வைத்துள்ளது. இதனை வாழ்வதற்கான உரிமையை பெற்றுக் கொள்வதற்குரிய வாழ்வு போராட்டமாக வேறு வழியில்லாமல் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

நாங்கள் அநாவசியமான கோரிக்கைகளை கோரவில்லை. நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் முகமாக, இந்நாட்டில் கௌரவத்தோடும் சுயமரியாதையோடும் வாழ வேண்டும். ஏனைய மக்கள் எப்படி தங்களுடைய அரசியல் அதிகாரங்களை உபயோகிக்கின்றார்களோ அதேபோன்று நாங்களும் எங்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக் [illegible] ஆட்சி முறைமையை [illegible] மைக்க வேண்டும் என்பது மட்டும் தான் எங்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது.

அதற்குக்கூட அரசாங்கம் இடமளிக்காமல் செல்லுமாயின் இந்நாட்டு மக்களின் வாழ்வை காப்பாற்றும் முகமாக, இந்த அஹிம்சை வழி போராட்டத்தில் ஈடுபட வேண்டியதொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் இந்நாட்டு மக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம.

கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்தை நடத்தி வருகின்றோம். இந்த விவகாரத்தை இன்னும் தள்ளிப்போட முடியாது. இதனை பேசித் தீர்மானிப்பதற்கு ஒரு தடவை பேச்சுவார்த்தை நடத்தினாலேயே போதும என்று தான் நாங்கள் கூறுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கை அரசிற்கு அழைப்பு

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆணையாளர் விசாரணைகளில் பங்குபற்றுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.


நவநீதம்பிள்ளை இந்த விசாரணைகளை எவ்வாறு நடத்தினாரோ அவ்வாறே தானும் இவ் விசாரணைகளை நடத்தி செல்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணை சம்பந்தமான வாய்மூல அறிக்கை எதிர்வரும் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும். அது சமர்ப்பிக்கப்படும் போதுதான் எவ்வளவு தூரத்துக்கு இவ்விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பாக தெரிந்துகொள்ளமுடியும்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச விசாரணைகள் சரியான முறையில் நடந்து கொண்டிருக்கின்றது. அதற்கான எல்லாத்தேவைகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ்காந்தி கொலை; கட்டவிழும் மர்மங்கள்



"பிரபாகரனுக்குத் தெரியுமா?"

"ஆரம்பக் கட்டத்தில் உள்ள வற்றைப் பார்க்கும்போது இவர்கள் பிரபாகரனுக்கு தெரிந்தே வந்தவர்களாக தெரிகிறது. சில தகவல் தொடர்புகள் இரகசிய சாம்பாஷணைகளில் தெரிகிறது. பின்னர் ஒருவேளை பிரபாகரனுக்கு தெரிந்து அவரே நினைத்திருந்தால்கூட அவரால் தடுக்க முடியாமல் போயிருக்கலாம் என்பகாது என்று சொல்ல முடியும். எனக்குப் பலவேறு இரகசியங்களை உடைத தது தமிழகத்தில் உயர் பொலிஸ் அதிகாரியாக இருந்த மோகன்தாஸ் எழுதிய நாவல் தான்!"

"இப்படி ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று என்னைத் தூண்டியது தமிழகத்தின் டி.ஜி.பி-யாக இருந்த மோகன்தாஸ். அவர் ஒரு நாவல் எழுதியிருக்கிறார் என்பதே வருகிறது.

ராஜீவ் கொலையை நேரடியாக எழுதினால் அது அப்போதைய ஆளுங்கட்சியை எதிர்நோக்க வேண்டியது இருக்கும் என்பதை எதிர்பார்த்து ஒரு நாவலாகக் கொடுத்துள்ளார். அவருடைய பத விக்காலத்தின் இறுதியில் எல். டி.டி.இ-க்கும் மோகன்தாஸ்"க்கும் விரோதம் உண்டு. ஆனாலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் வரப்போவதில்லை. அதிலும் எங்கள் இயக்கம் இது போன்ற காரியங்களில் செயற்படாது. எங்கள் இயக்கத்துக்கு தேவைப்பட்டால் செயவோம். அவருடைய இராணுவம் எங்களைக் கொல்ல திரும்ப வரப் போவதில்லை. இப்படிப்பட்ட வரைக் கொல்ல எங்கள் ஆட்களை வீணாக்க நான் விரும்ப வில்லை.

ஆனால், பணத்துக்காக இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பாருங்கள்' என்று கூறியது நாவலில் வருகிறது. ஆனால், சுந்தன் தலையிடவில்லை. இரண்டு தடவை

சொல்லப்படும் கடிதங்களை இரும் பொறை என்பவரிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறியது சி.பி.ஐ. இறந்து போனவர்களின் கடிதங்கள் இவை. கையெழுத்து உண்மையா என்பது இதுவரை தெரியாது. ஆனால் சி.பி.ஐ சில சாட்சியங்களை அவர்களே உருவாக்கி எல். டிடி. இ-யைச் சம்பந்தப்படுத்தினர்.

ஒரு புலனாய்வுப் பத்திரிகையா ளர் என்கிற அனுபவத்தில் நான் சொல்லுவது, இதில பல சாட்சியங்கள் உருவாக்கப் பட்டவை. இது ஒரு ஒ்ப்பந்தக் கொலை. பணத்துக்காக நடந்தவை. சிவராசன் ஒரு இரட்டை ஏஜென்ட். இந்திய புள்ளிகள் தான் இந்த ஒப்பந்தக் கொலைக்கு ஏற்பாடுகளை செய்துள்ளனர். ஜெயின் கமிஷன் ரிப்போர்ட்படி பிரபல சவுதி அரேபிய ஆயுத வியாபாரியான அட்னான், அர்னி மில்லர், சந்திராசாமி போன்றவர்களுக்கிடையே ஏராளமான மில்லியன டொலர் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது. ஜெயின் கமிஷனில் பதிவு செய்யப்பட்ட பின்னரும் இந்த வெளிநாட்டுத் தொடர்பு தகவலை சி.பி.ஐ-யும் சிறப்புப்



சந்திராசாமி

**ஜெயின் கமிஷன் ரிப்போர்ட்படி பிரபல சவுதி அரேபிய ஆயுத வியாபாரியான அடனான், அர்னி மில்லர், சந்திராசாமி போன்றவர்களுக்கிடையே ஏராளமான மில்லியன் டொலர் பணப் பரிமாற்றம் நடந்துள்ளது. ஜெயின் கமிஷனில் பதிவு செய்யப்பட்ட பின்னரும் இந்த வெளிநாட்டுத் தொடர்பு தகவலை சி.பி.ஐ-யும் சிறப்புப் புலனாய்வும் ஏன் கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்த கோணத்தில் விசாரிக்க வில்லை?**

## எங்கள் இயக்கம் இதுபோன்ற காரியங்களை செய்வதில்லை

சந்திக்க ஏற்பாடு செய்ததோடு சரி என்று நாவல் சொல் கிறது.

"எல்.டி.டி.இ-க்கு இதில் சம்பந்தம் இல்லை' என்பதை ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட நாள் முதல் "ரா' உளவு அமைப்பு சொல்லி வருகிறது. 1991 மே 21 ஆம் திகதி இரவு ராஜீவ் காந்தி கொல்லப்படுகிறார். 22ஆம் திகதி மத்திய அமைச்சரவைக் கூடுகிறது. அதில் ஐ.பி இயக்குநர், "ரா' அமைப்பின் தலைவர் எல்லாம் இருக்கின்றனர். ஆனால், கூட்டத்தின் முடிவில் சுப்பிரமணியன் சுவாமி, "கொலைக்கான காரணம் எல்.டி.டி.இ' என்று அறிவிக்கிறார். "ரா' தலைவர், "இதில எல்.டி.டி.இ இல்லை' என்கிறார். அதன் பின்னர் தமிழக அரசியல்வாதிகள் இதனைக் கையில் எடுத்து எல்.டி.டி.இ-தான் காரணம்

புலனாய்வும் ஏன் கவன த்தில் எடுத்துகொண்டு இந்த கோணத்தில் விசாரிக்க விலலை? என்பது தான் என்னுடைய கேள்வி. சிவராசன் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு 1991 மார்ச் மாதம் சிங்கப்பூர், சவுதி அரேபியா, டுபாய் போன்ற நாடுகளுக்கு சென்று வந்துள்ளார். இது விசாரணையின் ஒரு பகுதி. ஆனால், இவற்றை ஏன் மூடி மறைத்தனர்? இப்படி ஏராளமான கேள்விகள் உள்ளன.

கணவரைக் கொல்லக் காரணமானவர்களை சோனியா ஏன் கண்டுபிடித்துச் சொல்ல வில்லை? என்று நீங்கள் கேட்கலாம். அப்படி அவர் அதை செய்திருந்தால் அவரது காங்கிரஸ் கட்சியையே குழி தோண்டிப் புதைத்திருப்பார்கள். இப்படியொரு சூழ்நிலை உருவாவதைத் தடுக்கத்தான் சோனியா மௌனமானார்" என்று முடித்தார் ஃபெரோஸ் அஹ்மத்.

உண்மைக் குற்றவாளிகளை பி.ஜே.பி அரசாவது அடையாளம் காட்டுமா?

(முற்றும்)

ஜூனியர் விகடன்

தைதான் நான் உணர்கிறேன். 1991 மார்ச்- ஏப்ரலில் வந்த சிவராசன் டீம் பின்னர் எல்.டி.டி.இ சம்பந்தப்படாத நபர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தி வந்தது. சிவராசன் உபயோகித்து வந்த வயர்லெஸ் சாதனங்கள் எல்லாம் புலிகள் இயக்கத்துக்கு சம்பந்தப் பட்டவை அல்ல. எல்.டி.டி.இ உளவுத்துறை தலைவரான பொட்டு அம்மானின் டிரான்ஸ் மிட்டர் ஆப்ரேட்டர் சிவரூபன் சிவராசனோடு இருந்தார்.

ஆனால், அவரை சிவராசன் உபயோகிக்கவிலை. அவர் கண்ணிவெடியில் காலை இழந்ததால் செயற்கைக்கால் பொருத்த ஜெய்ப்பூருக்கு சென்றுவிட்டார். இப்படி சிவராசன் யாரையும் உபயோகிக்கவில்லை. தனியாக அவர் வைத்திருந்த வயர்லெஸ் சாதனங்களைத்தான் உபயோகிக்கிறார். இதைவைத்து யாரோடு இவர்களுக்குத் தொடர்பு? இது குறித்து சி.பி.ஐ முழுமையாக விசாரிக்கவில்லை."

ராஜீவ் கொலை வழக்கு விவகாரத்தில் இந்தியாவில் எல்லா அமைப்புகளும் ஒன்றாக சேர்ந்து ஒரு "கவர்-அப்' செய்தனர்.

புலன் விசாரணையிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை இது நடந்தது. அனைத்து உண்மைகளையும் குழப்பி, எல்லா சாட்சியங்களையும் அழித்து, இறுதியாக புலிகள்தான் இதற்குக் காரணம் என்கிற பிடிவாதமான முடிவை சி.பி.ஐ-யினர் கொடுத்தனர். ஆனால், எனக்கு எல்.டி.டி.இ-தான் காரணம் என்பது தெரிய வில்லை. ஒருவேளை எல்.டி.டி.இ இதில் சம்பந்தப்பட்டு இருந்தாலும் அது பெரிய அளவில் இருந்திருக்க பலருக்கும் தெரியாது. உண்மையல் அது நிஜக்கதை. ராஜீவ் கொலை'க்கான பின்னணி, காரணகர்த்தாக்கள் எல்லாம் இந்த நாவலுக்குள் வருகிறார்கள். இந்த நாவலின் பெயர் "The Assassination". 1993 ஆம் ஆண்டு இந்த நாவல் வெளியானது. நாவலில் உள்ள தகவல்களை இந்திய "ரா' உள்வுத் துறை அதிகாரிகள் அவருக்கு கொடுத்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.


இதை வெளியிட்டது "ரா' சம்பந்தப்பட்ட பப்ளிகேஷன் [launchers]. இந்தப் புத்தகம் மக்களிடம் சென்று சேராமல் தடுத்துவிட்டனர். அப்போது நரசிம்மராவ் இந்தியாவின் பிரதமராக இருக்கிறார். எனக்குக்கூட இந்தப் புத்தகம் பற்றிய தகவல், சுப்பிரமணியன் சுவாமியின் புத்தகத்தின் மூலம்தான் கிடைத்தது. இந்தப் புத்தகத்தை தேடினேன். எங்கேயும் கிடைக்கவில்லை. இறுதியில் புலனாய்வுத் துறை நண்பர் ஒருவர் கொடுத்த தகவ லின்படி அந்தப் புத்தகத்தை வாங் கப்போனேன்.

இந்தப் புத்தகம் அப்படியே ராஜீவ் கொலைச் சதியை திட்டமிட்டவர்களை, பலனடைந்தவர்களை கதாபாத்திரங்களாக எடுத்து வைக்கிறது. வில்லன் கரக்டராக இருப்பவர் பாதர் மூன்சைன். இவர்தான் சந்திராசாமி. ராஜீவ் காந்தியாக ஜார்வின் என்கிற கரக்டர் வரு கிறது.

சுந்தன் என்கிற கரக்டர் பிரபாகரனை வெளிப்படுத்துகிறது. ஐரோப்பிய மொழி ஒன்றில் "ஒற்றை கண்'ணுக்கு சைக்லேப்ஸ் என்று சொல்லப்பட... அந்தப் பெயர் சிவராசனுக்கு. இவர் Delta Force II என்கிற சினிமா படத்தைப் பார்த்து மனித வெடிகுண்டு தணுவை உருவாக்கும் கதை இந்த நாவலில் உண்மையை சொல்லியுள்ளார்.

இது "கான்ட்ராக்ட் கில்லிங்' என்கிறார். இந்த நாவலின்படி பாதர் மூன்சைனுக்கு (சந்திராசாமி) ஜார்வின் (ராஜீவ் காந்தி) மீது போபர்ஸ் இராணுவ பீரங்கி பேரத்திலிருந்து விரோதம் தொடங்குகிறது. பாதர் மூன்சைன் சுந்தனை தொடர்பு கொண்டு ஒப்பந்தம் பேசுகிறார்.

ஜார்வினை தீர்த்துக்கட்டும் ஒப்பந்தம். சுந்தன் இந்த ஒப்பந்தத்துக்கு முன்வரவில்லை. "நான் இதுபோன்ற வேலையெல்லாம் செய்வது இல்லை' என்கிறார் சுந்தன். இதற்கு சில காரணங்களையும் சுநதன் சொல்கிறார். "அரசியல்ரீதியாக ஜார்வின் ஒழிந்து போய்விட்டார். அவர் அதிகாரத்துக்கு திரும்ப



பிரபாகரன்

**சுந்தன் இந்த ஒப்பந்தத்திற்கு முன்வரவிலலை. நான் இது போன்ற வேலையெல்லாம் செய்வதில்லை என்கிறார் சுந்தன். இதற்கு சில காரணங்களையும் சுந்தன சொல்கிறார். "அரசியல் ரீதியாக ஜார்வின் ஒழிந்து போய்விட்டார. அவர் அதிகாரத்துக்கு திரும்ப வரப் போவதிலலை. அதிலும் எங்கள் இயக்கம் இது போனற காரியஙகளில் செயற்படாது.**

என்று சொல்ல ஆரம் பித்தார்கள்.

எல்.டி.டி.இ-யின் முக்கிய புள்ளிகளிடம் விசாரிக்கவில்லை. அந்த இயக்கத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு தமிழகத்தில் திரிந்த கீழ்மட்டத்தைச் சேர்ந்த சிலரைப் பிடித்து வாக்குமூலத்தையும் சில கடிதஙகளையும் ஆதார மாக வைத்து எல்.டி.டி.இ-யை சி.பி. ஐ குற்றவாளியாக ஆக்குகிறது. 'தணுவும் சாந்தனும் பிரபாகரனுக்கு எழுதியதாகச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மினி தேர்தல்!

தமிழகத்தில் மினி தேர்தல் நடைபெறுகிறது. உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள 2,130 வெற்றிடங்களுக்கு செப்ரெம்பர் 18 ஆம் திகதி நடக்கும் தேர்தல் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த உள்ளாட்சி இடைத் தேர்தலில் இதுவரை 4,914 பேர் போட்டியிடும் வகையில் ஒரு மினி தேர்தலாக காட்சியளிக்கிறது.

உள்ளாட்சித் தேர்தல் களத்தில் இந்தமுறை வித்தியாசமாக எதிரும் புதிருமாக நிற்பது, பிரதமராக இருக்கும் நரேந்திரமோடியின் பாரதிய ஜனதா கட்சியும் தமிழக முதல்வராக இருக்கும் ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும்தான். வழக்கமாக தமிழகத்தில் பிரதான தேர்தல் போட்டி என்பது அ.தி.மு.கவுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையில்தான் இருக்கும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அது சற்று வித்தியாசப்பட்டது. அ.தி.மு.க, தி.மு.க தவிர பா.ஜ.க தலைமையிலான வலுவான அணியும் களத்துக்கு வந்தது.

அந்த போட்டியின் காரணமாக தமிழகத் தேர்தல் களம் மும்முனைப் போட்டியை சந்தித்தது. தி.மு.கவுக்கு படுதோல்வி ஏற்பட்டது. அ.தி.மு.க 38 இடங்களில் வெற்றிபெற்றது. மீதியுள்ள ஒரு எம்.பி.யை, பா.ஜ.க பெற்றது.

இந்தக் காட்சிக்குப் பிறகு பா.ஜ.கவின் தமிழக தலைவர் பதவியில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய தலைவராக காங்கிரஸ் கட்சியின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரான குமரி அனந்தனின் மகள் தமிழிசை சவுந்திரராஜன் தலைவரானார்.

இவர், பா.ஜ.கவில். இவருக்கு அண்ணன் வசந்தகுமார் காங்கிரஸில் இருக்கிறார். புதிய தலைவரான தமிழிசைக்கு தமிழகத்தில் உள்ள அனைத்துத் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். குறிப்பாக தி.மு.க தலைவர் கருணாநிதியும் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தது.

முக்கிய அம்சம். இப்படி வலுவூன்றக் கருதும் பா.ஜ.கவுக்கும் அக்கூட்டணியில் இடம்பெற்றிருந்த டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடர் கழகம், வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் போன்றவற்றுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அவ்வளவாக ராசியான உறவு இல்லை. ஆனால், அந்த நிலைமையை புதிய தலைவராக பொறுப்பேற்ற தமிழிசை சவுந்திரராஜன் மாற்றிக் காட்டினார்.

மூன்று மேயர் பதவி, 8 நகராட்சி தலைவர் பதவி உள்ளிட்ட 400க்கும் மேற்பட்ட உள்ளாட்சி வெற்றிடங்களுக்கு நடக்கும் தேர்தல் இது. 'இத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் மாநில தேர்தல் ஆணையகத்தின் மீது நம்பிக்கையில்லை என்று அறிவித்து, உள்ளாட்சித் தேர்தலை புறக்கணித்தது தி.மு.க. அதே வழியை ம.தி.மு.க, காங்கிரஸ், பா.ம.க, தே.மு.தி.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுமே கடைப்பிடித்தன.

களத்தில் நிற்பது ஆளுங்கட்சியான அ.தி.மு.க மட்டும்தான் என்ற சூழ்நிலையில், பா.ஜ.கவும் களத்துக்கு நிற்கும் என்ற முடிபை எடுத்தார் தமிழிசை. அதற்காக கூட்டணிக் கட்சித் தலைவரான வைகோவை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

அவரும் பா.ஜ.க வேட்பாளர்களை ஆதரிக்க முடிபு செய்தார். அதேபோல் 'தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தையும் சந்தித்தார் தமிழிசை சவுந்திரராஜன். அவரும் பா.ஜ.க வேட்பாளர்களுக்கு ஆதரவு என்று அறிவித்தார். இப்படியொரு சூழ் நிலையில்தான் மினித் தேர்தல் போல் நடக்கும் உள்ளாட்சித் தேர்தல் அ.தி. மு.கவுக்கும், பா.ஜ.கவுக்கும் இடை யில் நேரடிப் போட்டியை உருவா க்கியிருக்கிறது.



இந்தப் போட்டியில் எங்களைப் பார்த்து அ.தி.மு.க. பயப்படுகிறது என்ற ரீதியில் பா.ஜ.க மாநிலத் தலைவர் கருத்துச் சொல்ல அதை உடனே மறுத்திருக்கிறார் சித்ரகுப்தன். இவர் யார்? அ.தி.மு.கவின் அதிகாரபூர்வ நாளேடான நமது எம்.ஜி.ஆர் பத்திரிகையில் அரசியல் எதிரிகளை அட்டாக் பண்ணி கட்டுரை எழுதுபவர்.

அப்படி பா.ஜ.கவையும் அட்டாக் பண்ணி எழுதப்பட்டுள்ள கட்டுரையில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கே இன்னும் பழகாத பா.ஜ.க நடைவண்டி ஓட்டும் காலத்தே நமக்கு பூச்சாண்டி காட்டுகிறது.

மகன்-வாத (ராமதாஸின் பா.ம.க) மது- வாத (தே.மு.தி.க) மதவாத (பா.ஜ.க) கட்சிகள் ஒன்றாகக் கூடினாலும் அவையாவும் உதவாத கட்சிகள் என்பதை உள்ளாட்சித் தேர்தல் முடிபுகள் பா.ஜ.கவுக்கு உணர்த்தும் என்று காட்டமாக கட்டுரை தீட்டியிருக்கிறார்.

நேரடிப் போட்டியில் களத்தில் நிற்கும் கட்சிகளில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இருக்கிறது என்றாலும், பா.ஜ.கவுக்கும் அ.தி.மு.கவுக்கும் போட்டி என்பதுதான் பறைசாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. வேட்புமனுக்கள் தொடங்கப்பட்ட உடனேயே மாநில தேர்தல் ஆணையத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் துவங்கிவிட்டன.

தேர்தல் அறிவித்தவுடன் ஆளுங் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகிறது ஆணையம் என்ற குற்றச்சாட்டை சுமத்தினார் கருணாநிதி. அதேபோல் ஆளுங்கட்சி வேட்புமனுக்களை மட்டுமே தேர்தல் அதிகாரிகள் ஏற்கிறார்கள்.

மற்றவர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்யவிடாமல் தடுக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து மாநில தேர்தல் ஆணையத்துக்கு படையெடுக்கிறார்கள் அரசியல் தலைவர்கள். குறிப்பாக பா.ஜ.க மாநில தலைவர் தமிழசையும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணனும் தேர்தல் ஆணையத்திடம் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

வேறு ஒருவர், இந்த தேர்தலையே நிறுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருக்கிறார். ஆனால், புகார்களுக்கு அவ்வப்போது பதிலடி கொடுக்கும் தேர்தல் ஆணையம், புகார் சொல்வதற்கு முன்பு அந்தப் புகார்கள் உண்மையா என்பதை பரிசீலித்து பின் புகார் செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளது.

இதையும் பா.ஜ.க மாநிலத் தலைவர் தமிழிசை, தேர்தல் ஆணையம் இப்படி அரசியல் கட்சிகளுக்கு ஆலோசனை வழங்குவது உள்நோக்கம் கொண்டது என்று பதிலடி கொடுத்திருக்கிறார்.

எந்த ஆட்சி நடைபெற்றாலும் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் மாநில தேர்தல் ஆணையத்துக்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஏழாம் பொருத்தமாகவே இருந்து வருகிறது. ஆனால், தி.மு.க ஆட்சியில் மாநிலத் தேர்தல் ஆணையத்தை சென்னை உயர்நீதிமன்றம் [illegible] அ.தி.மு.க [illegible] வில்லை.

அதுவும் மாநில தேர்தல் ஆணையராக இருக்கும் டாக்டர் சோ. அய்யர், அரசியல் கட்சிகள் கொடுக்கும் புகார்களின் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுத்து புகார்களில் நியாயம் இல்லை என்பதை நிரூபித்து வருகிறார்.

அதை உடனே செய்தி குறிப்புக்களாகவும் பத்திரிகைகளுக்கு வெளியிட்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதில் எதுவும் ஒளிவுமறைவு இல்லை என்பதை பறைசாற்றி வருகிறார். அதுமட்டுமின்றி, தேர்தல் ஆணையத்துக்கு கிடைத்திருக்கும் இன்னொரு துடிப்பான பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியான ஜோதி நிர்மலாவும் மாநிலத் தேர்தல் ஆணையரின் உத்தரவுப்படி தேர்தலில் எந்த முறைகேட்டுக்கும் இடம்கொடுத்துவிடக்கூடாது என்பதில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இந்த சூழ்நிலையில் பா.ஜ.கவுக்கும் அ.தி.மு.கவுக்குமான நேரடிப் போட்டி மக்கள் மத்தியில் கருத்து உருவாக்கம் ஏற்பட்டு வருகிறது. இது அ.தி.மு.கவுக்கு மாற்றாக இருக்கும் தி.மு.கவுக்கும் தலைவலி. மூன்றாவது கட்சியாக தமிழக அரசியலில் நிலைத்துவிட்ட தே.மு.தி.கவுக்கும் திருகுவலி. உள்ளாட்சித் தேர்தலில் எது எப்படிப் போனாலும் போட்டியிட்டிருக்க வேண்டும். அப்போதுதான் தமிழக அரசியல் களம் அ.தி.மு.கவுக்கும் தி.மு.கவுக்கும் இடையிலான போட்டிக் களம் என்பதும் அதற்கு போட்டியாக இருக்கும் மூன்றாவது சக்தி தே.மு.தி.க என்பதும் நிலைநிறுத்தப்பட்டிருக்கும்.

ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கும் அ.தி.மு.கவுக்கும் மட்டும் போட்டியல்ல. மோடியும் ரேஸில் இருக்கிறார் என்ற ரீதியில் அமைந்த களம் தி.மு.கவுக்கு பாதகமாக அமைந்தது. அதேபோன்ற சூழ்நிலை இப்போதும் உருவாகியிருக்கிறது.

தமிழக அரசியலில் தி.மு.கவுக்கும் அ.தி.மு.கவுக்கும் போட்டி என்ற நிலைமாறி அ.தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் நேரடிப் போட்டி என்ற கட்டம் வந்திருக்கிறது. தி.மு.கவுக்குள் நடக்கும் உட்கட்சி தேர்தல் அக்கட்சியில் தலைமைக்கும் ஸ்டாலினுக்கும் இடையே நடக்கும் பனிப்போர், தமிழகம் முழுவதிலும் உள்ள பல்வேறு மாவட்டச் செயலாளர்கள் மத்தியில் நிலவும் கோஷ்டி அரசியல் எல்லாம் அந்தக் கட்சியை உள்ளாட்சித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொடுக்க மறுத்து நிற்கிறது.

ஆனால், இன்னும் ஒன்றரை வருடங்களில் சட்டமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கும் தி.மு.க இந்த உள்ளாட்சித் தேர்தலை புறக்கணித்தது மிகப் பெரும் வரலாற்றுப் பிழை. அது அக்கட்சியின் எதிர்காலத்தை எப்படி தாக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அதேபோல் விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.கவும் இந்த தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி நிற்பது அக்கட்சியிடம் இருக்கும் மூன்றாவது கட்சி என்ற அந்தஸ்துக்கு ஆபத்தாக முடியும். அக்கட்சி எடுத்த புறக்கணிப்பு முடிபும் ஆபத்து.


அ.தி.மு.கவைப்பொறுத்தமட்டில் சட்டமன்ற தேர்தல் வெற்றி, பிறகு உள்ளாட்சித் தேர்தல் வெற்றி, மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் அபரிமித வெற்றி என்று வெற்றி அலையின் மீது பயணித்துக் கொண்டிருக்கிறது. இப்போது நடைபெறுகின்ற உள்ளாட்சி இடைத் தேர்தலிலும் அக்கட்சிக்கு வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அ.தி.மு.க தமிழகத்தில் எந்தக் கட்சியாலும் கூட்டணியாலும் அசைக்க முடியாத கட்சி என்ற இமேஜ் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்படும். அதுவே அடுத்துவரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஓர் அசையாச் சொத்தாக அமையும்!

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் ஈடுபடும் விருப்பம் பாதுகாப்பு செயலரிடமில்லை

## கோத்தபாய அடம்பிடித்தார் என்று கதைகதையாய் அவிழ்த்து விடுகிறார் லலித் வீரதுங்க



2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர், 2010 ஆம் ஆண்டு மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு வந்து, புதிய நாடாளு மன்றம் அமைக்கப்பட்டு, ஏப்ரல் மதம் 8 ஆம் திகதி புதிய அமைச்ச ரவை அமைத்தபோது, தனது சகோ தரர் கோத்தபாய ராஜபக்ஷவை அர சியலுக்கு வருமாறு அழைத்தார்.

அத்துடன் எந்த அமைச்சு வேண் டும் என கேட்டதற்கு, தனக்கு அரசி யலில் ஈடுபாடு இல்லை என வும் நகர அபிவிருத்தி துறையினை தந் தால் தன்னால் சிறப்பாக செயற்பட முடி யும் என கோத்தபாய கூறினார்.

இதனையடுத்து, பாதுகாப்பு மற் றும் நகர அபிவிருத்தி அமைச்சு உருவாக்கப்பட்டதுடன் அதன் செய லாளராக கோத்தபாய நியமிக்கப்பட் டார் என ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

450 மில்லியன் ரூபாய் பெறு மதியான வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொழும்பு மாநக ரசபையிடம் கையளிக்கும் நிகழ் வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். இந்நிகழ்வு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வளாகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெ ற்றது. இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனது சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷவை அரசியலுக்கு அழை க்குமாறு ஜனாதிபதி என்னிடம் கூறினார்.

ஜனாதிபதியின் விருப்பத்தை நான் கோத்தபாயவிடம் கூறிய போது, அதற்கு அவர் அளித்த பதில் மிகவும் அபூர்வமான ஒன்று.

உண்மையில் நான் இராணுவ அதிகாரி. அதன் காரணமாக நான் எனது கடமையை சரியாக செய் தேன். அதைவிட செய்வதற்கு எனக்கு வேறு ஒன்றுமில்லை. ஆனால் நகர அபிவிருத்தி துறை ஏதா வது கொடுத்தால் அதனை செய்து பார்க்கிறேன் என ஜனாதிபதியிடம் கூறுங்கள் என்று சொன்னார்.

உண்மையில் நான் இன்று மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் கூறியதை நான் ஜனாதிப தியிடம் சொன்னதும் அவர் மிக வும் விருப்பத்துடன், பாதுகாப்பு மற்றும் நகரஅபிவிருத்தி அதிகார அமைச்சினை உருவாக்குமாறு என்னிடம் கூறினார்.

நான் அன்று செய்தது மிகவும் சிறிய காரியம். ஜனாதிபதி சொன் னதை கோத்தபாயவிடம் கூறி னேன்.

அரசியலில் ஈடுபட விருப்பம் இல்லாத நிலையில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச் சின் செயலாளராக பொறுப்பேற்ற கோத்தபாய, பதவியேற்ற நான்கரை ஆண்டுகளில் சிறப்பாக செயற் பட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியில் அவ ரின் பங்கு அளப்பரியது. இவரின் சிறந்த சேவையை நான் பாராட்டு கின்றேன் மேலும் கொழும்பு மாந கர சபையின் அபிவிருத்திக்காக 450 மில்லியன் ரூபாய் பெறும தியான வாகனங்கள் மற்றும்



உபகரண்ணங்களை பெற்று கொடு த்தமைக்கு எனது நன்றியை, மகி ழ்ச்சியை தெரிவித்து கொள்கின் றேன்.

நான் 1961ஆம் ஆண்டினை நினைத்து பார்க்கின்றேன். அப் போது கொழும்புக்கு வருவதென் பது ஒரு கனவு போன்றது, 53 வரு டங்களுக்கு முன்னர் நான் எனது சிறுவயதில் முதன் முதலில் கொழு ம்பு நகரத்திற்கு வருகை தந்த போது, பார்த்ததற்கும் இப்போது கொழும்பு நகரம் காணப்படும் நிலைக்கும் பாரிய வேறுபாடு உள்ளது.

அப்போது வாகனத்தில் செல் லும் சிலர் குப்பைகள் நிறைந்த பைகளை தெருவில் வீசிவிட்டு செல்வதை கண்டிருக்கின்றேன்.

ஆனால் இன்று அந்த நிலை இல்லை. கொழும்பு நகரம் அவ்வ ளவு தூய்மையாக உள்ளது. மக்க ளும் நகரின் தூய்மையை பாதுகா ப்பது தொடர்பில் கவனம் செலுத்து கின்றனர்.

கொழும்பு இந்தளவுக்கு சிறப் பான நிலையை அடைய கோத்த பாயவின் அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான ஆற்றல் என்பனவே காரணம் என ஜனாதிபதி செய லாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# அமெரிக்க பொருளாதாரக் கொள்கை உலகில் இனிமேல் எங்கும் எடுபடாது

## சீனா, இந்தியாவை பின்பற்ற வேண்டும்-சரத் அமுனுகம

(கொழும்பு)

இந்தியா, சீனா இன்று பொரு ளாதார உற்பத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தி தமது நாடுகளை அபிவி ருத்திக்கு கொண்டு செல்கிறது. நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதால் பொரு ளாதார அபிவிருத்தி ஏற்படாது என்பதை அந்நாடுகள் புரிந்து கொண்டுள்ளன என பிரதி நிதிய மைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ் வாய்க்கி ழமை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டளைச் சட்ட பிரேர ணையை முன் வைத்து உரையா ற்றும் போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமெரிக்கா மற்றும் மேற்கு லகை விட இன்று இந்தியா, சீனா போன்ற நாடுகள் பொருளா தார த்தில் அபிவிருத்திகளை கண்டு வருகின்றன.

இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது. நுகர்வோர் உற்பத்திகளை ஏற்று மதி செய்வதால் பொருளாதாரம் அபிவிருத்தியை அடைய முடியாது என்பதை புரிந்து கொண்டு அந்நா டுகளில் தொழிற் துறைகள் முன் னேற்றம் கண்டு வருகின்றன. அதற்கு முன்னுரிமை வழங்கப்ப டுகின்றன.

எனவே, நாமும் மாற்றத்திற்கு செல்ல வேண்டும். இந்தியாவின் கடற்படை இன்று விசாலமாக்கப் பட்டு வருகிறது.

சீனாவில் கப்பல்துறை அபிவிரு த்தி கண்டுள்ளது.

எனவே, அமெரிக்கா சார்பான பொருளாதார கொள்கைகள் இன்று உலகில் எடுபடாது. உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். நாம் மாற்றத்திற்கு செல்ல வேண்டும்.

எமது கடல் வழியாகத்தான் உலகிற்கான எரிபொருள் விநியோ கக் குழாய்கள் செல்கின்றது. எரி பொருள்கள் ஏற்றிய கப்பல்களும் எமது கடல் மார்க்கமாகவே செல் கின்றன. இதனை பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத்தில் அபி விருத்தியை காண வேண்டும். அதற்காகவே ஜப்பானுடனும் உடன் படிக்கைகளை செய்து கொண் டோம் என அவர் மேலும் தெரிவித் தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## தன்னை உணர்ந்த நிலை

இராம கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு ஓவியர் இருந்தாராம். அவருக்கு ஒரு ஆசை "அதாவது இராமகிருஷ்ணரின் படத்தை வரைய வேண் டும். அதை அவரிடமே கொண்டுபோய் காட்டி அபிப்பி ராயம் கேட்க வேண்டும்'' இதுதான் அந்த ஓவியரின் ஆசை.

உடனே, இராமகிருஷ்ணரின் படத்தை வரைந்து முடித் தார். அதை எடுத்துக் கொண்டு போனார். இவர் போன சமயம் அங்கே இராமகிருஷ்ணர் சீடர்களுடன் உட்கா ர்ந்திருந்தார்.

அங்கு விவேகானந்தரும் இருந்தார். இந்த ஓவியர் கொண்டு போய் இராமகிருஷ்ணரிடம் தான் வரைந்த ஓவியத்தை காட்டினார்.

இராமகிருஷ்ணர் என்ன செய்தார் தெரியுமா? அந்தப் படத்தை பார்த்தார். உடனே அதன் காலைத் தொட்டார்.

குரு தேவருடைய இந்தச் செயல் சீடர்களுக்கு விய ப்பை உண்டு பண்ணியதாம். சிலபேர் மனதுக்குள்ளேயே குழம்ப ஆரம்பித்து விட்டார்களாம்.

"என்ன இது... அவரே அவருடைய படத்தின் காலைத் தொடுகிறார்" என்று யோசித்தார்கள். சில பேர் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டா ர்கள்.

இந்த இடத்தில் சீடர்கள் மட்டுமல்ல சீடரல்லாத பலரும் இருந்தார்கள்.

''தன்னுடைய காலைத் தானே தொடும் இவருடைய செயலைப்பற்றி என்ன நினைக்கிறது?" என்று அவர்களும் குழம்பிப் போய் நின்றார்கள். அந்தப் படத்தை வரைந்து அவரிடம் காட்டிய அந்த ஓவியருக்கும் அதிர்ச்சி.

இருந்தாலும் அவர் சீடரல்ல.

அதனால் கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

என்ன இது என்னால் என் கண்களையே நம்ப முடிய வில்லை. இது உங்களுடைய சொந்த உருவப்படம். நீங் கள் உங்கள் சொந்தக் கால்களையே தொடுகிறீர்கள். இது எங் களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது என்றார்.

இராமகிருஸ்ணரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்ததாம். அவர் சொன்னாராம்: இது என்னுடைய படம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது என்னுடைய படம் என்பதால் நான் இதன் காலைத் தொடவில்லை. நீ என்னுடைய சமநிலையை இந்தப் படத்தில் படம் பிடித்தக் காட்டியிருக்கிறாய். அதனால் அதன் காலைத் தொடுகிறேன். சமநிலையில் யார் இருந்தாலும் அது என்னுடைய படமாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாருடைய படமாக இருந்தாலும் சரி படம் யாருடையதென்பது முக்கியமில்லை. இதில் எது முக்கி யம் என்றால் அது தன்னை உணர்ந்த ஒரு உணர்வு நிலை யின் படம். அப்படியிருக்கும் போது அதனுடைய காலை நான் தொடவேண்டும். அதற்கு நீங்கள் எல்லோரும் ஏன் சங்கடப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்றாராம்.

இப்பொழுது த்தான் அங்கிருந்த சீடர்களுக்கும் மற்ற வர்களுக்கும் விபரம் புரிந்ததாம்.

இதற்கு முன்பு யாரும் செய்யாததை இவர் செய்தி ருக்கிறார். ஆனால் அவருடைய காரணம் மிகவும் நியாயமானது என்பதை உணர்ந்தார்களாம். இதுவரைக் கும் ஆன்மீகத்தில் சமநிலை அதாவது தன்னை உணர் ந்த நிலை பற்றி புரிந்து கொண்டோம்.

இல்லறத்தில் ஏற்படக்கூடிய சமநிலை பற்றி உங்களுக் குத் தெரியுமா? ஒரு அம்மா டாக்டரிடம் வந்து சொன்னார் களாம். டாக்டர், என் வீட்டுக்காரருக்கு உடம்பில் ஏதோ கோளாறு என்று நினைக்கின்றேன். நான் எவ்வளவு நேரம் பேசினாலும் காதில் விழாதது மாதிரி உட்கார்ந் திருக்கிறார் என்றாராம். அதற்கு அந்த டாக்டர்,

அது உடம்புக் கோளாறு இல்லையம்மா. அது பெரிய திறமை என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 93 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலர் தெரிவிப்பு

(முல்லாவி)

அனர்த்த முகாமைத்துவ பாதுகாப்பு அமைச்சின் முல்லை.மாவட்ட பிரிவின் ஊடாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவிலுள்ள 27 கிராம சேவகர் பகுதிகளில் வசிக்கும் 5 ஆயிரத்து 600 குடும்பங்களில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலகு வேலைத்திட்டத்தின் ஊடாக குடிநீர், உலர் உணவு பொருட்கள் வழங்குவதற்காக 93 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியும் குடிநீர் விநியோகத்திற்காக இரண்டு பௌசர் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலர் எஸ். குருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில அவர் கூறுகையில்,

முல்லை.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தல், அமைத்தல் உட்பட இலகு வேலைத்திட்டம் ஊடாக உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு விடுத்த அவசர வேண்டுகோளுக்கு அமையவே அமைச்சினால் முல்லை.மாவட்டத்திற்கு ஆறு கோடி ரூபா நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்நிதியிலிருந்து அனர்த்த முகாமைத்துவ பாதுகாப்பு அமைச்சின் முல்லை. மாவட்ட பிரிவினால் 93 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியும் குடிநீர் சேகரித்து வழங்குவதற்கு இரு பௌசர் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிடைத்துள்ள நிதியிலிருந்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா 27 கிராமங்களிலுள்ள 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான குடிநீர் விநியோகத்தின் போது ஏற்படும் செலவீடுகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

30 இலட்சம் ரூபா நிதியில் 27 கிராமங்களிலுள்ள 60 பொதுக் கிணறுகள் தலா 50 ஆயிரம் ரூபா செலவில் ஆழப்படுத்தும் வேலைகள் நடைபெறுகின்றன.

மேலும் 60 இலட்சம் ரூபா நிதியில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு குடும்பத்தில் ஒருவர் மாதத்தில் 8 தொடக்கம் 12 நாட்கள் பொது வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்துவதன் ஊடாக குடும்பத்திற்கு ஆறாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

அத்தோடு குடிநீர் விநியோகத்திற்காக அனர்த்த முகாமைத்துவ பாதுகாப்பு அமைச்சின் ஊடாகவும் உலக தரிசனம் நிறுவனத்தின் (World Vision) ஊடாகவும் தலா ஒவ்வோர் நீர் சேகரிப்பு பௌசர் வண்டிகளும் கிடைக்கப் பெற்று மக்களுக்கான குடிநீர் விநியோக நடவடிக்கைக்கு பயன்படுத்தப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## வீதி விபத்தில் இருவர் படுகாயம்




வவுனியா ஏ-9 வீதியிலுள்ள தேககவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12.15 மணியளவில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

விபத்தில் தோணிக்கல், வவுனியாவைச் சேர்ந்த கே. வேலாயுதம் (வயது 75) என்பவரும் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த சமரவீர என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர். விபத்து இடம் பெற்ற சமயம் அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்கள் இருவரையும் வவுனியா வைத்தியசாலைக்கு கொணடு சென்றுள்ளனர்.

ஒருவர் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்நதவர் என்பதால் வைத்தியசாலைக்கு வந்த படையினர் அவரைப் பொறுப்பேற்று வைத்திய சாலையில் சேர்த்தனர். மற்றையவர் அறிவற்று கிடந்ததால் அவரது விபரத்தைப் பெறமுடியவில்லை.

பின்னர் முதியவர் வைத்திருந்த தொலைபேசியூடாக அவரது மகனுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவா தந்தையைப் பொறுப்பேற்றார். விபத்துத் தொடர்பான விசாரணையை வவுனியா பொலஸார் மேற்கொண்டுள்ளனர். (2-250)






நிமாலின் சொந்த முயற்சியில் பாடி, நடித்த வலியின் வரிகள் இசைக்காணொளி வெளியீட்டு நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவில் நடைபெற்ற போது...

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்ட அமர்வு

### இம்மாதம் 27-30 வரை நடைபெறும்

(கிளிநொச்சி)

காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான அமர்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறுமென இவ்வாணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ குணதாச அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முழங்காவில் மத்திய கல்லூரியிலும் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பூநகரி மாவட்ட செயலகத்திலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பூநகரி மாவட்ட செயலகத்திலும் வைத்து விசாரணைகள் பதியப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்ஸ்கந்தபுரம்கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட வர்கள் மட்டும் 30 ஆம் திகதி தமது சாட்சியங்களை அன்றையதினம் மட்டுமே பதிவு செய்ய முடியும்.

அத்துடன் அமைப்புக்களினதோ அல்லது நபரினதோ புதிய முறைப்பாடுகள் அன்றையதினம்மட்டுமே ஆணைக் குழுவினால் கையேற்கப்படும்.

ஜனாதிபதி ஆணைக்குழுவினால் அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டவர்கள் மேற்கூறிய காலநேர ஒழுங்கமைப்பிற்கமைய அமர்வுகளுக்கு சமுகமளிக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

பூநகரி மாவட்ட செயலகப் பிரிவிற்குட்ட மற்றும் ஸ்கந்தபுரம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட அமைப்புக்களோ அல்லது நபரோ தமது முறைப்பாடுகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு மேற்படி கால நேர ஒழுங்கமைப்பிற்கு அமையப் பெற்றுள்ள இடங்களில்சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் புதிய முறைப்பாட்டாளர்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களது வாய் மூல முறைப்பாட்டிற்கான திகதியும் வழங்கப்படும் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2)

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தரை நியமியுங்கள்

### வெற்றிடத்தை நிரப்புமாறு மக்கள் கோருகின்றனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு மக்கள் மீள்குடியேறி நான்கு வருடங்கள் கடந்தும் நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 11.03.2010 இல் இருந்து இன்றுவரை 12 ஆயிரத்து 742 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 611 பேர் தற்போது மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை தமது பிரதேச செயலகத்திற்குரிய சமூக சேவை உத்தியோகத்தரை நிரந்தரமாக நியமிக்காதது ஏன் என அம்மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பணியாற்றும் ஓர் உத்தியோகத்தரே கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு வாரத்தில் இரு தடவைகள் வருகைதந்து சேவையாற்றுவதால் அச்சேவைகளை மக்கள் முழுமையாக பெறமுடியாதுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட 46 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 621 கிராமங்களை கொண்டு மூவின மக்களையும் அதிக சனத்தொகையையும் உள்ளடக்கி காணப்படும் ஒரேயொரு பிரதேச செயலகம் இதுவாகும்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் நலிவுற்ற குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்ற உதவுவது, முதியோர், விதவைகளுக்கான மாதாந்த கொடுப்பனவு தற்செயல் இடர் நிவாரணக் கொடுப்பனவு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழிலை ஏற்படுத்திக் கொடுத்தல், ஆகியவற்றுக்கான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது ஓர் சமூக சேவை உத்தியோகத்தரின் கடமையாகும்.

இந்நியமனத்தை மேற்கொள்ள முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேத நாயகனும் வட மாகாணசபையும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர் (2-267)

## உயிரிழப்புக்களை தவிர்க்க இடிதாங்கி அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிலுள்ள கோம்பாவில், புதுக் குடியிருப்பு மேற்கு இரணைப்பாலை, சிவநகர், ஆனந்தபுரம் ஆகிய 5 கிராம சேவையாளர் பிரிவுகளில் இடி தாங்கி பொருத்தப்படாமையால் மாரி காலங்களில் பாரிய இழப்புக்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கிராம சேவையாளர் பிரிவுகளில் யுத்தத்திற்கு முன்னரும் மீள்குடியேற்றத்திற்கு பின்னரும் அப்பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய மழையின் தாக்கத்தால் பொது மக்களுக்கும் கால்நடைகள் போன்றவற்றுக்கும் பாரிய உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதுடன் உடைகளுக்கும் அழிவு ஏற்படுவதாக அப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆகவே குறித்த பிரதேசங்களுக்கு இடி தாங்கியைப் பொருத்துவதன் மூலமே உயிர் இழப்புக்களையும் சொத்தழிவுகளையும் தடுத்து பாதுகாக்க முடியும் என அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 3 ஆயிரத்து 701 குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

எனவே மாரி காலம் அண்மித்துள்ள நிலையில் இடிமின்னல்தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்க புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது மக்கள் கையேந்தும் சமூகமாக இல்லாமல் ஒன்றிணைந்து முன்னேறும் சமூகமாக வேண்டும்


எமது மக்கள் கையேந்தும் சமூகமாக இல்லாது சொந்தக் கால்களில் நின்று முன்னேற்றம் காணும வகையில் ஒன்றி ணைந்து உழைக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. தெரிவித்துள்ளார்.

யாழ்.பண்டத்தரிப்பு பிரான்பற்று உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் எள்ளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எள்சார்ந்த உற்பத்தி மட்டுமல்லாது மக்களின் வாழ்வாதாரத்திற்கான ஏனைய உதவித் திட்டங்கள் தொடரபிலும் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எள்சார்ந்த உற்பத்திகள் கலப்படமற்ற வகையில் சுத்தமானதாகவும் சுகாதாரமான முறையில் செய்யப்பட வேண்டுமென்பதுடன் மக்களுக்கு பாதுகாப்பான வகையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரான்பற்று கிராமம் எதிர் காலத்தில் சிறந்த நல்லெண்ணெய் உற்பத்திக் கிராமமாக மாற்றியமைப்பதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.



கடந்த கால த்வறான அரசியல் தலைமைகளினால் எமது சமூகம் கையேந்தும்சமூகமாக வாழ வேண்டிய துர்ப்பாக்கியம் எதிர்கொள்ளப்பட்டிருந்த நிலையில் எதிர்காலத்தில் கையேந்தும் சமூகமாக இல்லாது சொந்தக்கால்களில் நின்று முன்னேற்றம் காணும் வகையில் திடசங்கற்பம் பூண வேண்டுமென றும் கேட்டுக் கொண்டார்.

இதில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் உதவுக்கரங்கள் கடன் திட்டம் தொடர்பான விளக்கவுரையினை யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி திட்ட இணைப்பாளர் ரகுநாதனும், உரையினை ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தனும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து எள்சார்ந்த உற்பத்தியாளர் சங்கத்திற்கான எள்ளும் சங்கத்தலைவர் ரவிச் சந்திரனிடம் அமைச்சர் கைய ளித்தார்.

இதன்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவகொங்காதரன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ)

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டியுள்ளது

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வை இழந்திருக்கும் மக்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டிய கடமையுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவு நாளும் நினைவுப் பேருரையும், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் செல்லா மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முத்லமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில், விழிப்புலனற்றோர் நடை பயிலும் பாதை களைப் போதியவாறு தடைகளின்றி வைத்திருக்க வேண்டும். தடுக்கி விழும் விதத்தில் நடைபாதைகளை வைத்திருக்கக் கூடாது. இன்னுமொரு விடயம் உண்டு விழிப்புலன் அற்றோர் வசிக்கும் இடத்தில்இருக்கும் தளபாடங்களை மாற்றவோ அகற்றவோ கூடாது. அவர்கள் கண் பார்வை குன்றினும் தாம் போய் வரும் பாதையை இலகுவாக உயத்துணர்ந்து கொள்வார்கள். தளபாடங்களை மாற்றினால் விழிப்புலன் அற்றோருக்குப் பாதிப்பு ஏற்படலாம். மேலும் விழிப்புலன் அறறோரின்பொருட்களைக்கொண்ட வாசஸ்தலம் மிகவும் நேர்த்தியாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களின் பாவனைப் பொருட்களை அவர்களே சென்று எடுக்க அனுமதிக்க வேண்டும்.

இன்னுமொரு முக்கிய விடயம் உண்டு. விழிப்புலன் அற்றவர்கள் எங்களைப் போன்றவர்கள். எங்களைப்போல் உணர்ச்சிகளை யும் எண்ணங்களையும் உடையவர்கள் என்பதை நாம் உணர வேண்டும். எவ்வாறு நீங்கள் ஒரு நிகழ்வில் மகிழ்வுடன் இருக்க ஆசைப்படுகின்றீர்களோ அதே போல் அவர்களும் ஆசைப்பட்டு நிற்கின்றார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. இப்படிப் பல விடயங்களைஉங்களுக்குக்கூறிவைக்கலாம்.

எமது மனதில், உள்ளத்தில் எம்மிலும் வலுக்குறைந்தவர்கள் மீது இயற்கையாகவே அன்பும் அரவணைக்கும் பாசமும் எழாவிட்டால் வலுவிழந்தோர் வண்ணமுற வாழுதல் கடினமாகிவிடும். இதை நாம் மறத்தல் ஆகாது.

போரின் பின்னர் வாழ்வு பாதிக்கப்பட்டு தினமும் உடல், உள தாக்கங்களுக்கு உட்பட்டு எதிர் காலம் கேள்விக்கு உரியதாகிப் [illegible] டிருக்கின்றார்கள். அவர்களுக்கு எம்மாலான பல வசதிகளையும் நாம் ஏற்படுத்திக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் சுயமரியாதையுடன் சுகதேகிகளாய் வாழ நாம் வசதி அளித்துக் கொடுக்க வேண்டும். கொழும்பில் என்னைக் காண ஒரு தமிழ் இளைஞர் வந்தார். ஊன்று கட்டைகளைப் பாவித்து கஷ்டப்பட்டே என் வீட்டினுள் நுழைந்தார். கண்பார்வை உடையவர்.


ஆனால் உடல் போரின் போது வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அவருக்கு என்ன உதவிகளை நான் செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் என்று கேட்டேன்.

உடனே அவர் சற்று உணர்ச்சி வேகத்துடன் "சேர்! எனக்கு எந்த ஒரு உதவியும் வேண்டாம். ஏதாவது ஒரு தொழில் செய்ய எனக்கு உதவுங்கள். நான் அதனூடாக என்னைப் பார்த்துக் கொள்வேன். எனக்கு மக்களின் அனுதாபம் தேவையில்லை" என்றார்.

பொதுவாக இவ்வாறான எமது சகோதரர்கள் தம்மீது அனுதாபம் காட்டுவதைக் கேவலமாக நினைக்கின்றார்கள். அந்த இளைஞர் இப்பொழுது எங்கள் நண்பர் ஒருவரின் வணிக ஸ்தலத்தில் வேலையொன்றில் இருக்கின்றார்.

இதிலிருந்து பல விடயங்கள் எமக்குப் புலப்படுகின்றன. மாற்றுவலுவுடையோரும் சுய மரியாதையுடன்வாழ ஆசைப்படுகின்றார்கள்.

மற்றவர்கள் போல் தாமும் உரிய வேலைகளில் சேர்ந்து உழைக்க முடியும் என்று எண்ணுகின்றார்கள். குடும்ப, சமூக மட்டத்தில் தாம் பாகுபாடின்றி நடத்தப்



பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

எனவேதான் அவர்களின் மனோநிலையைப் புரிந்து நாங்கள் அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட ஆவன செய்ய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இவர்களுக்கான பாரிய திட்டங்களை உரிய ஆராய்வின் பின்னர் நாம் வகுக்காமல் இருப்பதால் தனிமனிதர்கள் மட்டத்தில் அவர்களுக்கு என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து பார்த்து எமது வடமாகாணசபை பல உதவிகளை அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது. அதுவும் எம் மக்களுள் தாராள சிந்தையும் தயையும் உடைய சகோதர சகோதரிமார்களின் அன்பளிப்புகளைக் கொண்டே இவ்வாறு செய்து வருகின்றோம். அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பி ஆற்றி வந்த நற்சேவைகளை நாம் அனைவரும் எம்மால் ஆனமட்டில் தொடர்ந்து செய்வோமாக! அவரைப்போல் எமது வாழ்க்கையையே அர்ப்ப ணிக்க எம் மால் முடியாவிடினும் எமது சிறிய ஒத்துழைப்புக்களை நல்குவது மூலம் அன்னையார் தொடக்கிய கைங்கரியம் செவ்வனே தொடர நாம் வழி வகுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)


## பிரிவுத்துயர் பகிர்வு

### செல்லையா பாலகிருஷ்ணன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்து, அவுஸ்திரேலியா Melbourne ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலகிருஷ்ணன் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Boyd Chapel Springvale Botanical Cemetery, 600 Princes Highway, Springvale, VIC, 3171, Australia என்னும் முகவரியில் நடைபெறும்.

### ஞானதுரை அருண்தயாபரன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்து Auckland ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஞானதுரை அருண்தயாபரன் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Purewa Cemetery and Crematorium,100-102 St.Johns Rd, Meadowbank 1072 Newzealand. என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி குலசிங்கம் வசந்தாதேவி




இளவாலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் வசந்தாதேவி நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பின்னர் பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசல் இடிந்ததனால் பாகிஸ்தானில் 24 பேர் பலி!



பாகிஸ்தானின் லாகூர் நகரிலுள்ள பள்ளிவாசலொன்று அதன் கூரையுடன் இடிந்து விழுந்ததைத் தொடர்ந்து, அங்கிருந்து 24 சடலங்களை இதுவரையில் மீட்டுள்ளதாக லாகூர் நகரத்திலுள்ள அவசரசேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அங்கிருந்து குறைந்தபட்சம் 7 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். மீட்புப பணியினர் தொடர்ந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடிந்து விழுந்துள்ள இந்தப் பள்ளிவாசல் மிகவும் பழைமை வாயந்தது என்பதுடன், இதன் வெளிப்புறப்பகுதி அண்மையில் புனரமைக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நண்பகல் வேளை தொழுகைக்காக கூடியிருந்தபோதே இந்தக் கட்டடம் இடிந்துவிழுந்துள்ளது.

இது இவ்வாறிருக்க, கடந்த 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பாகிஸ்தானிலுள்ள குடியிருப்புப் பகுதியில் எரிவாயு வெடிப்பைத் தொடர்ந்து தொழிற்சாலையொன்று இடிந்ததில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 17 பேர் மரணமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# எபோலா வைரஸ் காரணமாக இதுவரை 2300 பேர் உயிரிழப்பு

எபோலா வைரஸ் நோய் காரணமாக இதுவரை 2300 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நோய் மேற்கு ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா, கின்னியா, சியார்ரா லியோன் உள்ளிட்ட நாடுகளில் கடுமையாக பரவி வருகின்றது.

எபோலா நோயை குணப்படுத்துவதற்கு இதுவரை மருந்துகள் கண்டுபிடிக்கவில்லை.

சர்வதேச நாடுகள் இந்த நோய் பரவுவதை தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்நோயினால் லைபீரியாவில் ஆயிரத்து 224 பேரும், கின்னியாவில் 555 பேரும் சியார்ரா லியோனில் 509 பேரும், காங்கோவில் 32 பேரும், நைஜீரியாவில் 8 பேரும் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை அழித்தொழிக்க சர்வதேசம் ஒன்றிணைய வேண்டும்

## ஈராக் பிரதமர் கோரிக்கை



ஷியா முஸ்லிம் பிரிவை சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக்கின் ஒரு பகுதியையும், சிரியாவின் ஒரு பகுதியையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இஸ்லாம் அரசு என அறிவித்துக் கொண்டனர். ஈராக்கின் குர்திஷ் படையினர் தீவிரவாதிகளிடம் இழந்த பகுதிகளை மீட்பதற்காக அமெரிக்காவின் உதவியுடன் போராடி வருகின்றனர்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஜோன் ஹெறரி தீவிரவாதிகளை ஒழிப்பது குறித்து ஆலோசனை நடத்த பக்தாத் சென்றுள்ளார்.

இது குறித்து ஈராக் பிரதமர ஹைடர் அல் அபடி கூறியதாவது,

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட சர்வதேச சமூகம் ஈராக்கிற்கு உதவ வேண்டும். இந்த புற்று நோயை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.


உண்மையில் எங்கள் பங்கு நாட்டை காப்பது. ஈராக் நாட்டையும், ஈராக்கியர்களையும் காப்பதில் சர்வதேச சமூகத்திற்கு பங்கு உள்ளது. திடீர் பயணமாக பக்தாத் வந்து உள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஜோன் ஹெறரியுடன் ஆலோசனை நடத்தவுள்ளேன்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அச்சுறுத்தலில் இருந்து சிரியாவை காப்பது ஐ.நாவின் சர்வதேச சமூகத்தின் கடமையாகும் என்று அவா தெரிவித்தார். (இ)




# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதலினை நடத்த முதலாவது உத்தரவு

## ஜனாதிபதி ஒபாமா விடுத்தார்



ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சிப்படைக்கு எதிராக சிரியாவில் வான் வழித் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக் மற்றும் சிரியாவின் பகுதிகளை இணைத்து தனி இஸ்லாமிய நாடு அமைக்கும் நோக்கத்துடன் போர் நடத்திவரும் ஐ.எஸ். ஐ.எஸ். இற்கு எதிராக நேட்டோ நாடுகளுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அமெரிக்க அரசாங்கம மேற்கொண்டது.

இந்த நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற செனட்களின் ஆதரவு இல்லாமல், ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு எதிராக சிரியாவில் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு ஐ.எஸ். இற்கு எதிரான தாக்குதலில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பிறப்பித்த முதல் உத்தரவாகும்.

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் நினைவுதினத்தில், அந்நாட்டு மக்களுக்காக வெள்ளை மாளிகையிலிருந்து ஒபாமா நிகழ்த்திய உரையில் இது குறித்த சில அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

அதில், எமது நாட்டுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கிளர்ச்சியாளர்கள், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை நாம் வீழ்த்துவோம்.

அமெரிக்க மக்களுக்கு பாதுகாப்பான சூழல் நிலவசெய்வதே எமது அரசாங்கத்தின் முதன்மையான முக்கிய கடமை. அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருக்க நினைத்தால், அவர்கள் யாராக இருந்தாலும வீழ்த்தப்படுவார்கள்.

ஆனால், தற்போதைய சூழல் என்பது முன்பு ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் நடத்திய தாக்குதலிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதை அமெரிக்க மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவர்களால் (ஐ.எஸ்.) தற்போது எமது நாட்டுக்கும் பிரிட்டனுக்கும் அச்சுறுத்தல் உள்ளது. இந்த நிலையில், நாம் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்.

ஐ.எஸ். கிளர்ச்சி அமைப்பின் ஆயுதக்குழுவுக்கு நிதி உதவி கிடைப்பதை நாம் முதலில் தடுக்க வேண்டும். இவர்களை இந்த நிலையிலேயே தடுக்காவிட்டால், உலகம் முழுவதிலும் ஊடுருவி தாக்குதல் நடத்துவார்கள். இதற்கான நடவடிக்கை சிரியாவில் தொடங்கப்படவுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகள் பல ஆண்டு காலமாக தொடர்ந்து வருகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு எதிராக ஈராக் இராணுவத்தினரையும் குர்திஸ் படையினருக்கும் பயிற்சியளிக்க சில ஆண்டுகள் தேவைபடும். ஆனால், அவர்களை (ஐ.எஸ்) உடனடியாக வீழ்த்த வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டது என்றார் ஒபாமா.

இது குறித்து பின்னர் பேசிய வெள்ளை மாளிகை அதிகாரிகள், ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு எதிரான வான்வழித் தாக்குதலை ஈராக் எல்லையில் உள்ள சிரியா பகுதியிலிருந்து தொடங்குவதற்கு அமெரிகக ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தனர்.

மேலும், இந்த உத்தரவு ஏற்கெனவே அறிவித்தது போன்று செனட்களின் ஆதரவு இன்றி பிறப்பிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# ஸ்கொட்லாந்து பிரிந்தால் மனமுடைவேன்-கமரூன்



ஸ்காட்லாந்து பிரிட்டனிடமிருந்து பிரிந்து போனால் தான் மனமுடைந்து விடுவேன் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்து பிரிட்டனிடமிருந்து பிரிந்து போகவேண்டுமா என்பது குறித்த கருத்தறியும் வாக்கெடுப்பு ஸ்கொட்லாந்தில் வரும் 18 ஆம் திகதி நடக்கவுள்ள நிலையில், ஸ்கொட்லாந்து தலைநகர் எடின்பரோவில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் கமரூன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த கருத்தறியும் வாக்கெடுப்பின் முடிவு மாற்றப்படமுடியாதது என்பதை கமரூன் ஸ்கொட்லாந்து மக்களுக்கு நினைவூட்டினார்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனும், பிரிட்டனின் ஏனைய இரு பிரதான கட்சிகளான, தொழிற்கட்சி மற்றும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர்கள், எட் மிலிபாண்ட் மற்றும் நிக்கிளெக் ஆகியோர், ஸ்கொட்லாந்து சுதந்திரம் குறித்து அடுத்த வாரம் நடக்கவுள்ள கருத்தறியும் வாக்கெடுப்பில், ஸ்கொட்லாந்து மக்களை பிரிந்து போக வாக்களிக்காதீர்கள் என்று வலியுறுத்த ஸ்கொட்லாந்து சென்றிருக்கிறார்கள்.


ஸ்கொட்லாந்து பிரிந்து போவதற்கு எதிராக வாக்களியுங்கள் என்று மிகவும் உணர்ச்சிகரமான ஒரு வேண்டுகோளை டேவிட் கமரூன் விடுத்திருக்கிறார்.

நாடுகளின் குடும்பம் சிதறிப் போவதை தான் பார்க்க விரும்பவில்லை என்று டேவிட் கமரூன், பிரிட்டனிலிருந்து வெளியாகும் "டெய்லி மெயில்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

இந்த மூன்று கட்சிகளின் தலைவர்களின் விஜயத்தை ஒரு "நாடகம" என்று வர்ணித்த ஸ்கொட்லாந்து சுதந்திரத்துக்கு ஆதரவான தலைவர்கள், இந்த வருகை ஒரு பீதியில் எடுக்கப்பட்ட முடிவு என்றும், இந்தத் தலைவர்களுக்கு ஸ்கொட்லாந்தில் ஆதரவு இல்லாததால், இந்த விஜயம் எதிர்மறையான விளைவுகளைத்தான் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார். (இ)

## சீனா அறிவிப்பு

# 2022 ஆம் ஆண்டளவில் முதல் விண்வெளி நிலையம்



சீனா தனது முதல் விண்வெளி நிலையத்தை 2022 ஆம் ஆண்டு நிறுவப்போவதாகக் அறிவித்துள்ளது.

[illegible] மான கால அட்டவணையை வெளியிட்டிருக்கிறார்கள்.

அமைக்கும் வேலைகளைத் தொடங்கப்போவதாக சீன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் இது குறித்த விபர

புதிய விண் ஆய்வுக் கூடம் ஒன்று இரண்டாண்டுகளில் தொடங்கப்படும். அதன் பின்னர் றொக்கெட்டுகள் மற்றும் பிற அமைப்புகள் உருவாக்கப்படும்.

சீன விண்வெளி வீரர்கள் ஏற்கனவே விண்வெளியில் கலன்களை பொருத்தும் நடவடிக்கைகளை செய்து வருகின்றனர்.

சீனா ஒரு விண்வெளி சக்தியாக உருவாக வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக சீனாவின் தலைவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் அதற்குத் தேவைப்படும் தொழில்நுட்பம் குறித்த விடயத்தில், ரஷ்யா மற்றும் அமெரிக்காவை விட, சீனா பின்தங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
– ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முதலமைச்சர் நிதியம் அமைய ஆளுநர் அனுமதிக்க வேண்டும்

கடவுள் கொள்கைக்கு எதிரானவர் பகுத்தறிவின் தந்தை என்று போற்றப்படும் ஈ.வே.ரா.பெரியார். நாஸ்திகக் கொள்கை உடைய அவர் திராவிடர்களின் முன்னேற்றம் தொடர்பில் கடுமையாகச் சிந்தித்தவர்.

பேரறிஞர் அண்ணாதுரை, எம்.ஜி.ஆர்., கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட பல தலைவர்கள் ஈ.வே.ரா.பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர்கள் என்ற உண்மை இங்கு நினைவுப்படுத்தற்குரியது.

கோயில் கட்டுதல், அபிஷேக ஆராதனை செய்தல் என்பவற்றைக் கடுமையாக எதிர்த்து பிரசாரம் செய்த பெரியாரிடம் ஒருநாள் ராஜாஜி என்று அழைக்கப்படும் ராஜகோபாலாச்சாரியார் சென்றிருந்தார்.

ராஜாஜி பெரிய மேதை. பிராமண குலத்தைச் சேர்ந்தவர். இறை நம்பிக்கை, அநுட்டானம் என்பவற்றில் மிகக் கவனம் கொண்டவர். இத்தகைய இயல்புடைய ராஜாஜி, கடவுள் கொள்கைக்கு எதிரான பெரியாரின் வீட்டில் ஒருநாள் தங்கினார்.

மறுநாள் காலை எழுந்த ராஜாஜி பெரியாரின் வீட்டிலுள்ள குளியல் அறையில் நீராடிவிட்டு வெளியே வந்தார். என்ன அதிசயம்! ஈ.வே.ரா.பெரியார் ஒரு திருநீற்றுத்தட்டத்தை ஏந்திய வண்ணம் காத்து நின்றார்.

ராஜாஜிக்கு ஒரே திகைப்பு. பெரியாரோ நாஸ்திகர், அப்படியிருந்தும் திருநீற்றைத் தன்னிடம் தருவதற்காக காத்திருந்தமை பெரிய அதிசயமே.

'...... நீங்கள் ஏன் இப்படி ...... என்று கேட்டார் ராஜாஜி. அதற்குப் பெரியார்; என் வீட்டுக்கு வந்த விருந்தாளி நீங்கள். உங்களை உரியமுறையில் கவனிப்பது எனது கடமை. நீங்கள் சைவ அநுட்டானம் பார்ப்பதில் மிகவும் தீவிரமானவர். எனது வீட்டிலோ சுவாமி அறையும் இல்லை. திருநீறும் இல்லை. ஆனாலும் உங்களின் தேவைக்காக திருநீற்றை நீங்கள் வந்தபோதே வாங்கி வைத்திருந்தேன் என்றார் பெரியார்.

கடவுள் கொள்கைக்கு எதிரான ஒருவர் திருநீற்றுத் தட்டை ஏந்தி நின்ற கதை பெரியாரின் உயர்ந்த பண்பை வெளிப்படுத்துகிறது அல்லவா! இதனால்தான் இன்று வரை பகுத்தறிவின் தந்தையாக ஈ.வே.ரா.பெரியார் பாரதம் எங்கும் போற்றப்படுகிறார்.

இந்தப் பெருந்தன்மைகள் எங்கள் அரசியலிலும் இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, எங்கள் வடக்கு மாகாணத்தின் அரசுக்கும் ஆளுநருக்கும் இடையில் இருப்பது மிகவும் அவசியம்.

வடக்கு மாகாணத்தில் முதலமைச்சர் நிதியம் ஒன்றை ஆரம்பிப்பது என்றால் அதற்கு ஆளுநர் அனுமதி கொடுப்பது மிகவும் அவசியம். இவ்வாறு அனுமதி கொடுக்கும் போது ஆளுநர் ஒத்துழைக்கிறார் என்று மக்கள் கருதுவர்.

வடக்கு மாகாண அரசு அமையமுன்னதாக வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கட்டுமானப்பணிகள் மற்றும் பாடசாலைப் புனரமைப்புகள் என்பன உரியகாலத்தில் நிறைவேறுவதில் வடக்குமாகாண ஆளுநரின் பங்கு காத்திரமாக இருந்தது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது.

இவ்வாறான செயற்பாடு வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தால்,

வடக்கு மாகாணத்தில் முதலமைச்சர் நிதியம் ஆரம்பிப்பதற்கு ஆளுநர் அனுமதி கொடுப்பதில் எந்த தயக்கமும் தடையும் இருக்க முடியாது.

எனவே, ராஜாஜியிடம் பெரியார் நடந்துகொண்ட பெருந்தன்மைகள் வடக்குமாகாண ஆளுநரிடமும் முதலமைச்சரிடமும் இருக்க வேண்டும். அப்போது தான் வட மாகாணம் அபிவிருத்தி அடைய முடியும். இதைவிடுத்து இயங்கு நிலைக்குத் தடை செய்வதானது, தவறான கற்பிதங்களை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தும் என்பதை உரியவர்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

# அரிசி தட்டுப்பாட்டை தவிர்க்க நெல்லை சேமித்து வைக்க களஞ்சியம் தேவை

## துணுக்காய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கென விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லை களஞ்சியப்படுத்தி பாதுகாத்து வைப்பதற்கு 120×40 அடி அளவீடு கொண்ட களஞ்சியசாலையொன்று தேவையாகவுள்ளதாகவும் இதை அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் அமைத்துத் தரவேண்டுமென துணுக்காய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் தங்கராசா சுதாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவானது பல்லாயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களைக் கொண்ட பிரதேசமாகும்.

இவ்விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான நெல், உழுந்து, பயறு, கௌபி உட் பட்ட பொருட்களை கொள்வனவு செய்து சேமித்துவைக்கக்கூடிய களஞ்சிய சாலை எமது சங்கத்திடம் இல்லை.

அறுவடைக்காலங்களின்போது விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்க அதிபரால் வழங்கப்படும் நிதிமூலம் சிறு தொகை நெல்லே எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. இதனால் பல விவசாயிகள் தமது நெல்லை தனியாரிடம் குறைந்த விலைக்கே விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதை நிவர்த்தி செய்யும் முகமாகவும் தற்போது ஏற்பட்டுள்ளது போல் அரிசி தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் எதிர்காலத்தில் ஏற்படாது தடுப்பதற்கு எம்மிடம் களஞ்சியசாலை இருக்குமானால் விவசாயிகளும் நுகர்வோரும் பெரும் நன்மையடைவார்கள்.

எனவே அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு களஞ்சியசாலை ஒன்றை அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவரது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# உயிர்த்தியாகங்களை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்று சர்வதேச விவகாரமாக உருவெடுத்துள்ளது. எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்துகிறது என்றால், அதற்கெல்லாம் பல ஆயிரம் போராளிகள், பொதுமக்களின் உயிர்த்தியாகங்களே காரணமாகும் என்று த.தே. கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் செல்வபுரத்தில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற வலி சுமந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் நிமால் தானேபாடி நடித்த "வலியின் வரிகள்" காணொளிப் பேழை வெளியீடு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு பல்வேறுபட்ட தேவைகள் இருக்கின்றன. இந்த தேவைகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும், வடமாகாணசபை ஊடாகவும், நாமும் இயன்றவரை பூர்த்தி செய்ய பலவித முயற்சிகளை எடுத்தாலும், மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உண்மையான வாழ்வாதாரங்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை. போரால் ஏற்பட்ட பில்லியன் கணக்கான சொத்தழிவுகளுக்கான நட்ட ஈடுகளை அரசு இன்றுவரை வழங்க வில்லை. மறுவாழ்வுக்கான உதவிகள், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை செய்ய வில்லை என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பினராகிய எங்கள் மீதும் பல்வேறு குறறச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்மக்களின் பிரச்சினைகள் இன்று சர்வதேச பிரச்சினையாக உரு வெடுதது சர்வதேச சமூகம் எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துகிறது என்றால் இந்த மண்ணுக்குரிய மக்கள் நாம் தலை நிமிர்ந்து சுயகௌரவமாக வாழவேண்டும். சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேணடும் என்ற உயரிய நோக்கத்தோடு உயிர்நீத்த பலரது உயிர்த்தியாகங்களே காரணமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையில் 3 தடவைகள் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றால் இவையெல்லாம் சாதாரண விடயங்களல்ல. சர்வதேச நெருக்கடிகள், அழுத்தங்களுக்குள் இலங்கை அரசு இன்று சிக்கி தவிக்கிறது. உயிர்த்தியாகங்களையாவரும அவ்வளவு இலகுவில் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது என்றார். (2-250)

# ஆலோசனைக்குழு அமைப்பு அமைச்சர் டெனீஸ்வரன்

(குருமன்காடு)

வட மாகாண மீன்பிடியை அபிவிருத்தி செய்யும் முகமாக வட மாகாண மீன்பிடி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக வட மாகாணத்தில் உள்ள சகல மீன்பிடி மாவட்டங்களிலும் உள்ள பிரச்சினைகள் குறித்து ஆலோசனைக் குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும். அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சட்ட ரீதியாக தடை செய்யப்பட்ட தொழில் முறை மற்றும் மீன்பிடி உபகரணங்களைப் பாவிப்பவர்கள குறித்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த அமைச்சர் அது தொடர்பில் நியதிச் சட்டங்களை உருவாக்க தயாராகி வருவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார். (2-250)

# கடைகளை உடைத்து திருடியவரை காவலாளிகள் மடக்கிப் பிடித்தனர்

(வவுனியா)

வவுனியா, சந்தை உள்வட்ட வீதியல் உள்ள நவீன சந்தை கட்டடத் தொகுதியில இரு கடைகளை உடைத்து திருடியவர்களை தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப்பிடித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் நவீன சந்தைத் தொகுதியில் உள்ள அழகுசாதனக் கடை மற்றும் ரெக்ஸ்ரைல்ஸ் கடை ஆகியவற்றை உடைத்து அவ்விரு கடைகளிலும் இருந்த 6 ஆயிரம் ரூபாய் மற்றும் 10 ஆயிரம் ரூபாய் பணத்தினை கொள்ளையடித்துள்ளனர். நவீன சந்தைத் தொகுதியில் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதனை அவதானித்ததும் ஒருவரை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இரு வர் அங்கிருந்து தப்பியோடி கண்டி பேருந்தில் ஏறி பயணமாகியுள்ளனர்.

இது தொடர்பில் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பேருந்தை வழிமறித்த வவுனியா பொலிசார் குறித்த இரு நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் ஹற்றன் மற்றும் எட்டியாந் தோட்டைப் பகுதிகளைச் சேர்நதவர் களாவர்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (2-250)

**அமைதியின் சொற்கள்**

அமைதியைப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் உலகை மாற்றுங்கள்

(பிரேம் ராவத்)

**இஸ்லாம் ஆன்மீக சிந்தனை**

**வரவுக்கேற்ப செலவு செய்**

★ பெரியோர்களுக்கு கண்ணியம் கொடுக்காதவரும், சிறியோர் மீது இரக்கம் கொள்ளாதவரும் எம்மைச் சேர்ந்தவரல்ல.

★ எவர் மரணித்துவிட்ட குழந்தையின் தாயிடம் சென்று ஆறுதல் கூறுகிறாரோ, அவருக்கு சொர்க்கத்தின் போர்வையை போர்த்தப்படும்.

★ தன்னுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவனும், எல்லாச் செயல்களிலும் நடுநிலையை கைக்கொள்பவனும் நிச்சயம் ஏழ்மையை அடையமாட்டான்.

★ ஆடம்பர வாழ்வை விட்டு, உங்களைத் தற்காத்துக் கொள்ளுங் கள். ஏனென்றால் ஆடம்பர வாழ்வு வாழக்கூடியவர் அல்லாஹ்வின் சொந்த அடியாராகமாட்டார்.

★ செல்வம் என்பது பொருட்கள் அதிகமாக வைத்திருப்பதல்ல. போதும் என்ற மனம் படைத்திருப்பதே செல்வம்.

★ செல்வச் செழிப்போடு வாழும் போது, நீ இறைவனை நினைத்தால, துன்பம் அடையும்போது இறைவன் உன்னை நினைப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன் லீக் இருபது- இருபது

## ரோகித் விலகல் கப்டனாக மலிங்க?



சம்பியன்ஸ் லீக் 'இருபது-20' தொடரில் இருந்து, மும்பை அணி கப்டன் ரோகித் சர்மா விலகினார்.

ஆறாவது சம்பியன்ஸ் லீக் 'டுவென்டி-20' கிரிக்கெட் தொடர் வரும் 17 ஆம் திகதி தொடங்குகிறது. சென்னை, கொல்கத்தா, பஞ்சாப் உள்ளிட்ட 8 அணிகள் நேரடியாக பங்கேற்கும்.

இந்தியா வின் மும்பை அணி, பாகிஸ்தானின் லாகூர், இலங்கையின் எக்ஸ்பிரஸ், நியூசிலாந்தின் வடக்கு டிஸ்டிரிக் அணிகள், தகுதிச்சுற்றில் (செப்., 13-16) விளையாடுகின்றன.

இதில் மும்பை அணிக்கு கப்டனாக இருந்தவர் ரோகித் சர்மா. கடந்த இங்கிலாந்து தொடரில் 2 ஆவது ஒருநாள் போட்டியில் பீல்டிங்கின் போது, வலது கை நடுவிரலில் காயம் ஏற்பட்டது. உடனடியாக நாடு திரும்பிய இவர், பெங்களூர் தேசிய கிரிக்கெட் அக்டமி வந்தார்.

காயம் குணமடைய குறைந்தது நான்கு வாரங்கள் தேவைப்படும் என்பதால், வரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து விலகினார்.


இந்த வாரம் முதல் மறுவாழ்வு பயிற்சியில் ஈடுபடவுள்ள ரோகித், வெஸ்ட் இண் டீஸ் அணிக்கு எதிரான தொடரில் இடம் பெறு வார் என்று தெரிகிறது.

புதிய கப்டன் ரோகித் விலகலை அடுத்து, புதிய கப்டன் தேடல் தொடங்கி யுள்ளது.

மும்பை அணிக்கு ஹர்பஜன் சிங் முதன் முதலில் சம்பியன்ஸ் லீக் கோப்பை (2011) வென்று தந்தார். இலங்கை அணிக்கு 'இரு பது-20' உலக கோப்பை (2014) பெற்றுத் தந்தவர் மலி ங்கா. பார்படாஸ் அணிக்காக முதன் முறை கரீபியன் கோப்பை கைப்பற்றி அசத்தியவர் போலார்டு. இதனால், இந்த மூவரில் ஒருவர் கப்டனாக நியமிக்கப்பட வாய்ப்புள்ளது. (க)

விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்ற சானியாவுக்கு பலத்த வரவேற்பு



யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் கிண்ணத்தை வென்ற சானியா மிர்சா தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவை சந்தித்து வாழ்த்து பெற்றுள்ளார். தெலுங்கானா பிராண்ட் தூதரான சானியா மிர்சா யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் கிண்ணத்தை வென்று இந்தியாவுக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

இந்த வெற்றியை அவர் இந்தியாவுக்கும், புதிதாக பிறந்த தெலுங்கானா மாநிலத்திற்கும் அர்ப்பணித்துள்ளார்.

இந்நிலையில் இந்தியா வந்துள்ள சானியா தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவை சந்தித்தார். இதையடுத்து முதல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, சானியா மிர்சா சந்திரசேகர் ராவின் ஊக்குவிப்பால் யு.எஸ். ஓபன் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றி பலரை ஊக்குவிக்கும்.

சானியா மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சானியாவுக்கு தேவையான உதவிகளை செய்வதாக ராவ் வாக்குறுதி அளித்துள்ளார். (க)



அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. வலி. வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் ச.சஜீவனின் நிதியில் இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. யுத்தத்தின் போது முடங்கிப் போன குறித்த விளையாட்டு கழகம் தற்போது மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது. எனவே குறித்த கழகத்தை உற்சாகப்படுத்தும் முகமாக குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை நாமகள் சம்பியன்

அராலி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 07 பேர்கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி திங்கட்கிழமை பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி போட்டியில் மானிப்பாய் றெட் றேஞ்சர் விளையாட்டுக்கழகமும் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறவில்லை.

இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி, 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)



சுன்னாகம் வாழ்வகம் இல்லத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான (கண்பார்வை) விளையாட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம், வைத்திய கலாநிதி மலரவன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 70 அடி நீளப் படகுடன்...

பருத்தித்துறை கடற்பரப்பில் 70 அடிக்கும் அதிக நீளமுடைய மிகப் பெரிய இந்திய மீனவர் படகொன்றைக் கைப்பற்றிய இலங்கை கடற்படையினர் அதிலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களையும் நேற்று வியாழனன்று கைது செய்திருக்கின்றனர்

பருத்தித்துறை மற்றும் தலைமன்னார் கடற்பிரதேசத்தில் வியாழக்கிழமை ஒரே நாளில் 55 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதுடன், அவர்கள் வந்த ஏழு மீன்பிடி படகுகளையும் கைப்பற்றியிருப்பதாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தலைமன்னார் பகுதியில் கைது செய்யப்பட்ட 30 மீனவர்களையும் வரும் 24 ஆம் திகதி வரையில் விளகக மறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றம் வியாழனன்று உத்தரவிட்டிருக்கின்றது.

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை கடற்டையினர் யாழ்மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் நேற்று வியாழனன்று காலை கையளித்திருந்தனர். இவர்களை செப்டம்பர் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட 70 அடிக்கும் அதிக நீளமுள்ள மீன்பிடி படகொன்றை இலங்கைக் கடற்படையினரும், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளும் இப்போதுதான் முதற்தடவையாகக் கண்டிருப்பதாக யாழ்மாவட்ட கடறதொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் நடராஜா கணேசமூர்த்தி கூறினார். (செ-11)

## கூட்டமைப்புடன் பேச...

ஜனநாயகத்தில் எவரையும் எவரும் சந்திப்பதற்கான உரிமையுள்ளது.

ஐ.நா. பொதுச்சபை கூட்டத் தொடரின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நான் சந்திக்க விருப்பம் கொண்டுள்ளேன். ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் இடம் பெற்ற இலங்கை மீதான வாக்கெடுப்பின் போது இந்தியா எடுத்த நிலைப்பாட்டுக்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதால், இவ்விவகாரத்தை சர்வதேசமயப்படுத்த விடமாட்டோம்.

இந்தியாவோ அல்லது இலங்கையோ வெளிநாட்டு விசாரணைகளை ஏற் றுக்கொள்ளாது.

காணமற்போன 20 ஆயிரம் பேர் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. பிரபாகரனின் மகன் பாலசந்திரனின் மரணத்துக்கு யார் காரணம் என்பது குறித்து இன்னமும் தெரியவில்லை.

பாலச்சந்திரன் விவகாரம் குறித்து நாங்கள் விசாரணை செய்து வருகிறோம்.

இராணுவம் இதனைச் செய்திருகும் என் நாம் கருதவில்லை. ஆயினும் இது தொடர்பிலான உண்மையை அறிவதற்காக விசாரணை செய்கிறோம்.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான உறவுகள் குறித்து அச்சம் கொள்ள வேண்டிய தேவை இந்தியாவுக்கு இல்லை என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இச் செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## குடும்பப் பதிவுகளை...

ளவில் சேகரிக்கப்பட்டுள்ளதை அறிய முடிந்துள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபனுடைய வீட்டுக்கும் சென்று இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என அறிய முடிந்தது.

இது தொடர்பாக மாகாண சபை உறுப்பினரிடம் வினவியபோது, நான் வெளியில்சென்றிருந்தவேளை இராணுவச்சீருடையுடன் வந்து குடும்ப பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையின் மூலம் தமிழர்கள் எத்தகைய அடக்கு முறைகளுக்கு மத்தியில் வாழ்கின்றனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மாகாண சபை உறுப்பினருக்கு சிறப்புரிமையுள்ளது என்று கூறுகின்றனர் அந்த சிறப்புரிமைக்கு இராணுவத்தினர் எவ்வாறு மதிப்பளிக்கின்றனர் என்பதை மீண்டும் ஒருமுறை அறித்து கொள்ளக் கூடிய தாகயிருந்தது.

அதேவேளை மாகாண சபை உறுப் பினர்களுக்கே இவ் வாறான அடக்கு முறைகளும் அடிப்படை உரிமை கள் மீறப்படுவது சர்வ சாதாரணமாக இடம்பெறும் போது சாதாரண பொது மக்களின்நிலைமை எவ்வாறு இருக் கும் என்றும், இராணுவத்தினர் மேற்கொள்ளும் குடும்பப்பதிவு நட வடிக்கையானது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்றும் இது தொடர்பில் மாகாண சபை ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கஜதீபன் மேலும் தெரிவித்தார். (செ-6)

## முல்லைத்தீவில்...

தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினர் காவலுடன் திணிக்கப்படுகின்ற இந்த ஆக்கிரமிப்பு அடையாளத்தின் முதற்கட்டமாக நேற்று மேலுமொரு புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது இதுகுறித்து மக்களின் தகவலை அடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவ்விடத்திற்கு நேரில சென்று தகவலை உறுதிப்படுத்தினார்.

இது தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில், கொக்கிளாய் பகுதியில் ஏற்கனவே புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டதை நாம் அறிந்திருப்போம். தற்போது அதற்கருகாமையில் மேலுமொரு புத்தர் சிலை அமைக்கப்பட்டு, சிறீ சம்போதி மகா விகாரை என்ற சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பெயர்ப்பலகையும் வைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இதற்காக கொக்கிளாய் ஆரம்ப வைத்தியசாலைக்கு சொந்தமான சுமார் 30 மீற்றர் அகலமும் 100 மீற்றருக்கும் மேற்பட்ட நீளமும் உடை நிலப்பகுதி அபகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டினர்.

பழைய வேலிகள் அகற்றப்பட்டு புது வேலிகள் போடப்பட்டிருப்பது தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட புத்தர் சிலைக்காக தனியார் காணி அபகரிக்கப்பட்டிருந்தது. குறித்த பொதுமகன், தனது காணி அபகரிப்பிறகு எதிராக வழக்கு தொடர்ந்துள்ள நிலையில், மீண்டும் ஒரு [illegible] நிறுவி விகாரையை அ[illegible] தெரிவித்துள்ளார். (செ-11)

## வடக்கு - கிழக்கு மக்களி...

கடந்த ஞாயிறுக்கிழமை நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியிருந்தார்.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் நடத்தை, பழக்க வழக்கங்கள் உட்பட சகலவற்றையும் இராணுவம் கண்காணித்து வருகிறது.

இது பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவும் இவ்வாறு புலனாய்வு செய்து அந்த தகவல்களை அரசாங்கத்திற்கு வழங்கி வருவதாகவும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் வடக்கில் இருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை ஆராயுமாறும் அவர்கள் வடக்கில் ஈடுபட்டு வரும் பணிகள் குறித்து தேடிப் பார்த்து அது பற்றி தனக்கு அறிய தருமாறும் விக்னேஸ்வரன் தமிழ் இளைஞர்களுக்கு ஆலோ சனை வழங்கியுள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர்,

வடக்கு பிரதேசத்தின் பாதுகாப்புக்காக பொலிஸ் நிலையங்கள் இருப்பதாகவும் முதலமைச்சரின் பாதுகாப்புக்காகவோ, அவர் சென்று வரும் இடங்கள் பற்றி தேடவோ இராணுவத்தினர் இரகசியமாகவோ அல்லது பகிரங்கமாவோ ஈடுபடுத்தப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அரச புலனாய்வாளர்கள், தன்னை பின் தொடர்வதுடன் புகைப்படங்களை எடுத்து, தகவல்களை திரட்டி வருவதாக முதலமைச்சர் விக்னேஸவரன் கூறியிருந்தார்.

எனினும் அப்படியானஎந்த தேவையும் இராணுவத்திற்கு இல்லை என இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## உங்களின்...

க்குமுழங்காவில் கிருஷ்ணா நகரில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-6)

## ஆளுநரின் அதிகார எல்லை...

தாய் உள்ளது.

மேலும் மாகாண சபையில் மாகாணசபை நிதியம், அவசரகால நிதியம் ஆகிய இரு நிதியங்கள் மட்டுமே இருக்க முடியும்.

முதலமைச்சர் நிதியம் என்ற 3-வது நிதியம் இருக்க முடியாது என கூறியதுடன், முதலமைச்சர் நிதியத்தினை ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பிவைக்க உளதாகவும் கூறியுள்ளார்.

பிரதம செயலாளர் சட்டத்திற்கு அமைவாக சேவையாற்றுபவர். அவர் யாருக்கும் கீழ்பட்டு சேவையாற்றவேண்டிய அவசியம் இல்லை. அவரை ஜனாதிபதி மட்டுமே கட்டுப்படுத்த முடியும்.

எனவே சட்டரீதியான உத்தரவுகளை மட்டும் முதலமைச்சர் கொடுக்க முடியும். அவர் அதனை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார். அதற்கு மேல் சட்டத்திற்கு முரணாக அவர் செயற்பட மாட்டார்.

மேலும் ஆளுநர் பின்வரும் விடயங்கள் பற்றி கூறினார்.

**மாகாண சபை ஆளுநரை நீக்க வேண்டுமாயின்,**

1. குறித்த ஆளுநர் அரசியல் அமைப்புக்கு எதிராக செயற்பட்டு இருக்க வேண்டும்.

2. அரச நிதியை கையாடல் செய்திருக்க வேண்டும்.

3. லஞ்சம், ஊழல் செய்திருக்க வேண்டும்.

4. தான் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளை கைவிட்டு இருக்க வேண்டும்.

அத்தகைய நேரத்திலையே மாகாண சபை அது பற்றி ஜனாதிபதிக்கு அறிவித்து, ஆளுநரை நீக்க முடியும்.

அல்லாமல் வேறு எந்தவகையிலும் ஆளுநரை மாகாண சபையினால் நீக்க முடியாது அதற்குரிய தகுதியோ சட்டமோ இல்லை.

**அதேவேளை மாகாணத்தில் ஆளுநருக்கு உள்ள அதிகாரம்,**

1. மாகாண சபையை ஆரம்பித்து வைக்க முடியும்.

2. முதலமைச்சருடன் கலந்தாலோசித்து எந்தவொரு சபை அமர்வையும் பிற்போட முடியும்.

3. முதலமைச்சருடன் கலந்தாலோசித்து மாகாண சபையை கலைகைகும் அதிகாரம் உண்டு.

4. மாகாண சபை நியதி சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கும் அதிகாரம் உண்டு.

5. முதலமைச்சர், அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து சபை அமர்வில் உரையாற்ற முடியும்.

6. மாகாண நியதி சட்டம் தொடரபில் தடையிட முடியும்.

7. முதலமைச்சரை அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் உண்டு.

8. அமைச்சரவை தீர்மானங்களை ஆளுநருடன் கலந்தாலோசித்த பின்னரே அமுல் படுத்தமுடியும்.

9. அமைச்சரவை தீர்மானத்தில் தவறுகள் இருந்தால் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம்.

10. நியதி சட்டத்தை அனுமதிக்கும் அதிகாரம் மற்றும் நியதி சட்டம இறுதியாக ஆளுநரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. நியதி சட்டத்தில் தவறுகள் இருந்தால் அதனை சுட்டிக்காட்டி தவறினை திருத்த கோரி மாகாண சபைக்கு ஆளுநர் அனுப்பி வைப்பார்.

12. ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்ட தவறுகள் திருத்தப்படாமல் மீண்டும் அந்நியதி சட்டத்தை மாகாண சபை ஆளுநருக்கு அனுப்பி வைத்தால் அதனை ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பார்.

ஜனாதிபதி அதனை மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பார். பின்னர் அந்த நியதி சட்டத்தை மேல் நீதிமன்றம் அனுமதித்தாலே அது அங்கீகரிக்கப்படும்.

**மாகாண சபைக்கு எவ்வாறு நிதி கிடைக்கின்றது?**

1. மாகாண சபை நிதி நியதி சட்டத்தின் கீழ் வரும் நிதி. அதாவது மாகாண சபைக்கு உட்பட்ட வரிகள் மூலம் வரும் நிதி.

2. மாகாண சபை செயற்பாட்டுக்கு மத்திய அமைச்சு தரும் நிதி. மத்திய அரசு இந்த நிதியினை மானிய அடிப்படையிலையே தரும் அதனை மாகாண சபை திருப்பி செலுத்த தேவை இல்லை.

3. மாகாண சபை திட்டங்களுககு மத்திய அரசு தரும் கடன். அதன்னை மத்திய அரசின் திறை சேரியின் ஊடாகவே பெற்று கொள்ளலாம்.

4. விசேட வேலை திட்டத்திற்கு வெளிநாட்டு நிதி.

இதனைமத்திய அரசின்கொள்கை திட்டத்தின் ஊடாகவே பெற்றுகொள்ளலாம். அதேவேளை புலம்பெயர்ந்தவர்கள் நிதி வழங்குவதாயினும் மத்திய அரசின் அனுமதியுடன் கொள்கை திட்டத்தின் ஊடாக திறை சேரி ஊடாகவே பெற்று கொள்ளாலாம்.

5. உள்நாட்டில் இருப்பவர் மாகாண சபைக்கு நிதி அளிப்பதாயினும் மாகாண அமைச்சருடன் கலந்துரையாடி ஆளுநரின் அனுமதி பெற்று பிரதம செயலாளரின் ஊடாக மாகாண திறைசேரிக்கே அனுப்ப முடியும்.

**மாகாண சபை எவ்வாறான நிதியங்களை வைத்திருக்க முடியும்?**

1. மாகாண சபை நிதியம்.

2. அவசரகால நிதியம். இவை இரண்டு தவிர வேறு எந்த நிதியமும் மாகாண சபை வைத்திருக்க முடியாது.

மாகாண சபை கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்வு மூலமும் அரச கணக்காய்வு நாயகத தின் திணைக்களத்தின் அதிகாரிகளாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். (செ-11)

## வட - கிழக்கில் 25 வருடங்...

அவர்களின் ஜனநாயக உரிமைகளை பிரயோகிப்பதைத் தடுக்க முயல்கின்றார்கள் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவேசமாக தெரிவித்தார்.

முழங்காவில் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல 11.30 மணிக்குமுழங்காவில் கிருஷ்ணா நகரில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கல்லூரிகளில், பாடசாலைகளில நடைபெறும் உள் நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்தலாம். ஆனால் வெளியில் நடைபெறும விழாக்களுக்கு அதுவும் அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு அவர்களைக் கூட்டி வருவது சரியென எனக்குப் படவில்லை.

இந்தப் பழக்கத்தை நாங்கள் அடியோடு நிறுத்த வேண்டும். குழந்தைகளின் படிப்பிற்கே நாங்கள் முதல் இடம் கொடுக்க வேண்டும்.

பல கடமைகளுக்குள்ளும் நான் உங்களுடன் சேர்ந்து இந்த நிகழ்வில பங்கு கொள்கின்றேன் என்றால் இன்று யாவரும் சேர்ந்து முன்னேற வேண்டிய ஒரு கட்டாயம் எமக்கு உருவாகியுள்ளதே என்பதால்தான்.

மக்களுக்குப் பயனளிக்கும் பலவித செயற்திட்டங்களில் நாம் இப்பொழுது இறங்கியுள்ளோம். இது வரை காலமும் நாங்கள் எதைச் செய் தோம்? என்றார்கள். இப் பொழுது ஏன் செய்கின்றோம்? என்கிறார்கள்.

மொத் தத்தில் இராணுவம் வட கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து 25' வருடங்களுக்கேனும் இருக்க வேண்டும என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அதனை நாம் எமது ஒற்றுமையால் முறியடிக்க வேண்டும். அதற்கேற்றவாறுதான் மக்களுக்குப் பயன் தரும் வேலைத்திட்டங்களை, மக்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கும் வேலைத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்தி வருகின்றோம். எந்தவித பாகுபாடுமின்றி இப் பேர்ப்பட்ட வேலைத்திட்டங்களில் எமது தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் ஐக்கியப்படுத்தப்படுவார்கள்.

எல்லாவிதத் தடைகளையும் நாம் தகர்த்தெறிந்து முன்னேறும் காலம் தற்பொழுது உதித்துள்ளது என்று வடக்கு முதலமைச்சர் மேலும தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசு...
அமுல்படுத்தாமை

யினால் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்காமையினால் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு திட்டமொன்றை எட்டுவது சிரமமாகியுள்ளது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் புதிய ஆணையாளர் இளவரசர் அல் ஹுசெய்னை நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புறச் சக்திகளின் அழுத்தம் காரணமாகவும், தமிழ் பூர்வீகத்தைக் கொண்ட காரணத்தினாலும் ஐக்கிய நாடுகள்மனித உரிமைப் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்க நேரிடும் என லங்கா சமசமாஜ கட்சி எச்சரிக்கை விடுத்திருந்ததாகத் தெரிவித்துள்ளார். (செ-11)


**டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதிஉயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்பு உடனடியாக காத்திருக்கின்றன**

**Car washer 40 பேர் உடன்தேவை**



Basic Salary 750DHS
Commission 5 DHS per car
Other benefit Tips & OT

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
**கைவசம் வீசா உள்ளதால்**
**மிகக் குறுகிய காலத்தில் பயணம்**
**(மாதம் 80,000ற்கு மேல் சம்பளம் பெறக்கூடியது)**

இடம் :-உதயன் விருந்தினர் விடுதி.
இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை,
காளி கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- எதிர்வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை.
நேரம் :-மு.ப10.00 - பி.ப 3.00மணிவரை
ஆவணங்கள் :- பாஸ்போட் சுயவிபரக்கோவை, photo
முக்கிய குறிப்பு:- வங்கிக் கடன் வசதியும் பெற்று தரப்படும்

**உடன் தொடர்பு கொள்ள**

Lanka Voice Adve (Jaffna) :0779527575
Lanka Voice Adve (Vavuniya, Mannar )- 0766697789
Capita Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor Grand Pass, Colombo 14.
(C-8482) LL No : 2248



**பிறிண்டிங் மெசின் விற்பனைக்கு**

HAMADA மெசின்-02
பேப்பர் கட்டர் (சைனா)-01
பிளேற் கீற்றர் (776)

**தொடர்புகளுக்கு:-0777507686**



**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம்-III**

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
**(60 மணித்தியாலங்கள்)**
பிரிவு-I சனி, ஞாயிறு. 9.00-11.30 AM
II சனி, ஞாயிறு. 3.00-5.30 PM
ஆரம்பம்:-13.09.2014 சனிகாலை 9 மணி
(7767)

**மேலதிக தொடர்புகள்:-0772170065**
**ஐடியல் கல்லூரி**
**கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.**



**Obtain a world class UK Qualification**

**HND IN**
**CIVIL ENGINEERING**




**புதிய பிரிவு ஆரம்பம்: 14/09/2014**

(சி-8469)
மேலதிக விபரங்களுக்கு
021 4900 900
071 7775 333

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
E-Mail :info@iis.edu.lk



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**After A/L**
**What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும். பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும் சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினை புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)
(சி-8484)

| | Batches Starts on | |
|---|---|---|
| 13/09/2014@3.00pm | | 20/09/2014@9.00am |
| 15/09/2014@3.00pm | 17/09/2014@9.00am | 22/09/2014@11.00am |

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935



**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532



**கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதிஉயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன**

| CATEGORY | QTY | MONTHLY SALARY (QR) AC |
|---|---|---|
| Technician | 05 | 1600-1900+OT |
| Plumber | 04 | 1800-2000+OT |
| Electrical Technician | 03 | 1600-1900+OT |
| Handyman | 03 | 1600-1800+OT |
| HV AC Technician | 06 | 1700-2000+OT |
| Painter | 03 | 1400-1600+OT |
| Grader operator | 05 | 1500+500+OT |
| Dozer operator | 05 | 1500+500+OT |
| Punctury | 06 | 1500+500+OT |
| Diesel operator | 06 | 1500+500+OT |
| Excavator operator | 05 | 1500+500+OT |
| Auto Electrician | 05 | 1300+300+OT |
| Shuttering Carpenter | 05 | 1100+300+OT |
| Van Sales Man | 05 | 1500+300+OT |
| Garden Helper (Age 30-55) | 10 | 1000+OT |

**தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்**

இடம் :-உதயன் விருந்தினர் விடுதி.
இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை,
காளி கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை.
நேரம் :-மு.ப 10.00 - பி.ப 3.00 மணிவரை
ஆவணங்கள் :- பாஸ்போட் சுயவிபரகோவை, photo
முக்கிய குறிப்பு:- வங்கிக் கடன் வசதியும் பெற்று தரப்படும்.

**உடன் தொடர்பு கொள்ள**

Lanka Voice (Jaffna) :0779527575
Lanka Voice (Mannar, Vavuniya)- 0766697789
Capita Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor Grand Pass, Colombo 14.
(C-8482) LL No : 2248



**யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்**

அருள் ஒளி தர்சன மாலையும் புரட்டாதி மாத சிறப்புப் பூஜையும்



இடம் : திவ்வியஜீவன சங்க மண்டபம்
சட்டநாதர் கோயிலடி நல்லூர்.
காலம் : 14.09.2014.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் புரட்டாதி மாத சிறப்புப்பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

குறிப்பு : ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜை இடம்பெறுகின்றது.
(7763)

யாழ் தொடர்புகளுக்கு 077 6993861. 0779825004 [illegible] தொடர்புகளுக்கு 0045 97180192


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.